# தமிழ்நாட்டில்

# ஆடவர் மகளிர் சரிநிகர் வரவு-செலவு திட்டத்தை நோக்கி...

சமூக கண்காணிப்பகம் - தமிழ்நாடு

**2008**

**திருத்திய பதிப்பு : நவம்பர் 2008**

**<u>தொடர்புக்கு:</u>**

**சமூக கண்காணிப்பகம் - தமிழ்நாடு**
202, சித்ரா அவென்யூ, (ஷாப்பிங் காம்பிளக்ஸ்),
எண்.9, சூளைமேடு நெடுஞ்சாலை, சென்னை - 600 094.
தொலைபேசி : 91-44- 2374 6044
பேக்ஸ் : 91-44- 2374 6107
மின் அஞ்சல் : admin@swtn.org
இணையத்தளம் : www.swtn.org

**பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டிற்கான குறியீடுகளின் அடிப்படையில் பிற மாநிலங்களோடு ஒப்பிடும்போது மேல்நிலையில் இருக்கும் மாநிலமான தமிழகத்தில் ஆடவர் மகளிர்க்கான சரிநிகர் கொள்கை மற்றும் அதே அடிப்படையிலான வரவு-செலவு திட்டமிடுதல் இல்லையென்றாலும் மகளிர் மேம்பாட்டிற்கான முழுமையான ஒரு கொள்கை இல்லாதது வருத்தத்திற்கு(ம் வஞ்சப் புகழ்ச்சிக்கும்) உரியதே.**

ஏட்டிலே பெண்களுக்கான திட்டங்கள் பல இருந்தாலும் தமிழ்நாட்டில் தலித், பழங்குடியினர் மற்றும் இடைநிலைப் பணியாளர் வர்க்கத்தைச் சேர்ந்த பெண்களின் அப்பட்டமான நிலை மிகவும் கவலை தருவதாக இருக்கிறது. உலகமயமாக்கலும் தனியார்மயமாக்கலும் தமது வீச்சால் ஏழ்மையை அதிகரிக்கச் செய்து மேலும் குறிப்பிட்ட பிரிவு பெண்களுக்கு பட்டினியேப் பரிசாகத் தருகின்றன என்பதை பல அடித்தள அறிக்கைகள் தெரிவிக்கின்றன. **தமிழக மகளிர் மேம்பாடு குறித்து மாநில அரசின் அணுகுமுறையில் ஏனோ உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறையும், ஆடவர் மகளிர் சமநீதிப் பார்வைகளும் சுத்தமாகக் காணப்படவில்லை.**

**பெண்களுக்கு அதிகாரமளிக்கும் அரசின் சீரிய பொறுப்பை அளவிட ஆடவர் மகளிர் சரிநிகர் வரவு-செலவு திட்டமிடுதல் என்பது வலிமையான ஒரு கருவியாகும்.** தமிழக மகளிர் குறித்த மாநில அரசின் கொள்கை வடிவாக்கம் மீதான விவாதத்தை குடிமைச் சமூகம் மற்றும் அரசாங்க முகவர் அமைப்புகள் பரவலாக்க ஏற்படுத்த வேண்டும் என்ற தீவிர விருப்பத்துடன், □சமூகக் கண்காணிப்பகம் - தமிழ்நாடு□ இந்த ஆய்வுச் சிற்றேட்டை வெளியிடுகிறது. ஆடவர் மகளிர் சரிநிகர் வரவு-செலவு திட்டமிடுதல் மாநிலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு மகளிருக்கு குறிப்பாக தலித் மக்கள், பழங்குடியினர் பெண்கக் மற்றும் பணியாளர்களில் பெண்கள் ஆகியோருக்கு அதிக அதிகாரம் மற்றும் வாய்ப்புகளை தரும் என நம்புவோமாக.

இந்த ஏட்டினை உருவாக்க எங்களுக்கு உதவிய அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறோம். குறிப்பாக எமது ஆராய்ச்சி வழிகாட்டி **முனைவர் பாக்கியராஜ்**, அறிவுரையாளர் **பேரா. ஜான் குமார்**, ஆராய்ச்சியாளர் **திரு. கிருஷ்ணமூர்த்தி**, சமூகக் கண்காணிப்பகம் - தமிழ்நாடு, மையத்தின் நிர்வாகப் பணியாளர்கள் **திருமதி. ஸ்டெல்லா** மற்றும் **திரு. சேவியர்** ஆகியோருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறோம்.

**காமாட்சி சுந்தரமூர்த்தி** — **ஆராய்ச்சியாளர்**

**மனு அல்போன்ஸ்** — **இயக்குநர்**

## <u>தமிழகத்தில் ஆடவர் மகளிர் சரிநிகர் வரவு-செலவுத் திட்டமிடுதலை நோக்கிப் பரிந்துரைத்தல்</u>

"தமிழகத்தில் ஆடவர் மகளிர் சரிநிகர் வரவு-செலவுத் திட்டமிடுதலை நோக்கி" என்ற ஆய்வுச் சிற்றேட்டின் முதல் வரைவை அடிப்படையாகக் கொண்டு, சமூகக் **கண்காணிப்பகம் - தமிழ்நாடு, 2007 நவம்பரில் "தமிழ்நாடு விமன்ஸ் கலெக்டிவ்" மற்றும் "இனிஷியேடிவ்ஸ் : விமன் இன் டெவலப்மெண்ட்' (ஐவிட்)** ஆகிய இரண்டு மகளிர் இயக்கங்களை (தமிழகத்தில் ஆடவர் மகளிர் சரிநிகர் வரவு-செலவுத் திட்டமிடுதல் நோக்கிப்) பரிந்துரைக்கும் முயற்சிகளுக்குத் தலைமை தாங்கி முன்னெடுத்துச் செல்ல அழைப்பு விடுத்தது.

இவ்விரண்டு அமைப்புகளும் தோழமையுடன் பதில் தந்து, சமூகக் கண்காணிப்பகம் - தமிழ்நாடு அமைப்புடன் இணைந்து ஒரு மாநில அளவிலான கலந்தாய்வரங்கத்தை ஏற்பாடு செய்தன.

**2008 பெப்ருவரி 1 அன்று, சென்னையில் தமிழகத்தின் மகளிர் அமைப்புகளின் முக்கிய தலைவர்களையும், பெண் ஆராய்ச்சியாளர்களையும் செயல்வீரர்களையும் கலந்தாய்வரங்கம் சந்திக்க வைத்தது. பங்கேற்பாளர்கள், மேற்சொல்லப்பட்ட ஆய்வுச் சிற்றேட்டின் பொருளடக்கத்தைத் தீவிரக் கவனத்துடன் விவாதித்து, ஆடவர் மகளிர் சரிநிகர் வரவு-செலவுத் திட்டமிடுதல் தொடர வேண்டிய பணி என்று ஏக மனதாக ஏற்றனர். தமிழகத்தில் விளிம்பு நிலை பெண்களின் தேவைகளோடு ஆடவர் மகளிர் சார்ந்த வரவு-செலவுத் திட்டமிடுதலை இணைத்திட அர்த்தமுள்ள பரிந்துரைகளும் தரப்பட்டன.**

வெகு விரைவில், நவோ-தமிழ்நாடு அமைப்பு "நலத்திற்கான உரிமைகள் மீதும் பெண்களின் நலத்திற்கான கரிசனம் மீதும் அரசின் பொறுப்பு - இடைவெளிகளும் அறைகூவல்களும்" என்ற தலைப்பில் செய்தி-தொடர்பு சாதனக் கூட்டம் ஒன்றை நடத்தியது. அதில் "சமூகக் கண்காணிப்பகம் - தமிழ் நாடு' மையம் ஆடவர் மகளிர் சரிநிகர் வரவு-செலவுத் திட்டமிடுதல் பற்றிய ஆய்வின் அடிப்படையில் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டது.

2008 பெப்ருவரி முதல் ஏப்ரல் மாதம் முடிய தமிழகச் சட்டமன்ற வரவு செலவுத்திட்ட அமர்வுகளுக்குத் தயாரிப்பு நடந்தது. அவ்வேளை, "தமிழ்நாடு விமன்ஸ் கலெக்டிவ்" 'அமைப்பின் திருமிகு ஷீலு பிரான்சிஸ் மற்றும் "சமூகக் கண்காணிப்பகம் - தமிழ்நாடு" அமைப்பின் திருமிகு காமாட்சி சுந்தரமூர்த்தி ஆகிய இருவரும் பல முக்கிய அரசியல் கட்சிகளின் தலைவர்களையும் அர்ப்பணத்தோடு பணி செய்யும் அரசு நிர்வாகிகளையும் சந்தித்து, தமிழகத்தில் ஆடவர் மகளிர் சரிநிகர் வரவு-செலவுத் திட்டமிடுதலைத் தொடங்கி வைக்கும் தேவையைப் பரிந்துரைத்தனர்.

ஏற்கனவே சொல்லப்பட்ட ஆய்வுச் சிற்றேட்டின் முதல் (ஆங்கில) வரைவுப் பிரதிகள் பலருக்கும் விநியோகிக்கப்பட்டு, இம்முயற்சியில் ஈடுபாடு கொண்டு உழைக்கும் அனைவரும் கலந்துரையாடி விவாதம் செய்ய அடித்தளமாக உதவியது,

"சமூகக் கண்காணிப்பகம் - தமிழ்நாடு" மையம் தமிழ்நாடு விமன்ஸ் கலெக்டிவ் அமைப்பின் **திருமிகு ஷீலு பிரான்சிஸ்,** அவரது மிகுந்த அர்ப்பண ஈடுபாட்டுக்காகவும் தமிழக ஆடவர் மகளிர் அடிப்படையில் வரவு செலவுத்திட்டமிடுதலைத் திறமையாக முன்னெடுத்துச் செல்வதற்காகவும் நன்றி சொல்கிறது. பெப்ருவரி கலந்தாய்வரங்கத்திற்காகத் தங்களது பங்களிப்பு நல்கிய **திருமிகு பியூலா** மற்றும் **முனைவர் நீலவல்லி (ஐவிட்)** ஆகியோருக்கும் நன்றி நவில்கிறது.

## உள்ளடக்கம்


**பக்க எண்.**

**பாகம் - I : ஆடவர் மகளிர் சரிநிகர் வரவு-செலவு திட்டம் : பின்னணி**

1. உலகளாவிய நிலை - 7

2. கருத்தாக்கம் - 11

**பாகம் - II : இந்தியாவில் ஆடவர் மகளிர் சரிநிகர் வரவு-செலவு திட்டம்**

3. தேசிய நிலவரம் 15

4. இந்திய மாநிலங்களில் நிலவரம் - 23

5. பெண்களுக்கான சிறப்புக் கூறு திட்டம் - முன் வந்த மாதிரிப் படிவத்தின் ஓர் உருமாற்றமா ? - 27

**பாகம் - III : தமிழகத்தில் ஆடவர் மகளிர் சரிநிகர் வரவு-செலவு திட்டமிடுதல் நோக்கி**

6. ஆய்வு முடிவுகள் - 31

7. பரிந்துரைகளும், கோரிக்கைகளும் - 43

**பாகம் - IV : பின் இணைப்புகள்**

அ. ஆடவர் மகளிர் சரிநிகர் வரவு-செலவு திட்டத்திற்கு சி.பி.ஜி.ஏ.வின் சில பரிந்துரைகள் - 46

ஆ. ஆடவர் மகளிர் தொடர்பான அருஞ்சொல் விளக்கத் தொகுதி - 49

இ. துணை நின்ற நூல்கள் - 52

# பாகம் I

## ஆடவர் மகளிர் சரிநிகர் வரவு-செலவு திட்டம் : பின்னணி

1. உலகளாவிய நிலை
2. கருத்தாக்கம்

## ஆடவர் மகளிர் சரிநிகர் வரவு-செலவு திட்டம் - உலகளாவிய நிலை

"ஆடவர் மகளிர் சரிநிகர் வரவு-செலவு திட்டமிடுதல்" இன்றளவும் உலகத்தின் பல பகுதிகளில் ஆரம்ப;ச் கட்டத்தில் தான் இருக்கிறது.

1970களில் மற்றும் 1980களில் மகளிர் மேம்பாட்டு ஆதரவாளர்கள் மேம்பாட்டு செயல்முறையில் மகளிரை இணைத்துக் கொள்ள கோரிக்கை விடுத்தனர். 1990களில் இந்த முக்கியத்துவம் ஆண்-பெண் சமத்துவ பிரச்சனைகள் மற்றும் மேம்பாட்டு கொள்கை திட்டமிடுதலிலும் ஒரு மாற்றம் வந்தது. அதாவது, ஒட்டுமொத்த கொள்கைகளைத் திட்டமிடுதல் மற்றும் வரவு-செலவு திட்ட செயல்முறைகளில் இரு பாலருக்கும் முக்கியத்துவமளித்தல் என்ற நிறுவனமயத்திற்கு மாறியது.

- **1995 செப்டம்பர், பெய்ஜிங்கில் நடைபெற்ற நான்காவது உலக மகளிர் மாநாட்டில்** அரசு பெருநிலை திட்டங்களிலும் இரு பாலினர்க்கான சரிநிகர் கண்ணோட்டம் வலியுறுத்தப்பட்டது.
- **ஜுன் 2000இல் நடைபெற்ற ஐ.நா. பொதுக்குழுவின் 23-ஆவது சிறப்பு கூட்டத் தொடரிலும்** வட்டார, தேசிய மற்றும் சர்வதேச அளவில் வரவு-செலவு திட்டமிடுதல் செயல்முறைகளில் ஆடவர் மகளிர் அடிப்படையிலான சமநிலையைக் குறிக்கோளாகக் கொள்ள வலியுறுத்தப்பட்டது / கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. மற்றும் **2000இல் ஐக்கிய நாடுகள் மேம்பாண்டிற்கான உலகளாவிய இலக்கு** ஆடவர் மகளிர் சரிநிகர் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் 8 அம்சங்களைக் கொண்டிருந்தது.
- **2001 ஆம் ஆண்டில், பெண்களுக்கான ஐ.நா. வளர்ச்சி நிதியம் 20 நாடுகள் திட்டத்தை (2001-04)** அறிமுகம் செய்தது. இது அரசுகளும் குடியுரிமை சமூகமும் மற்றும் ஆட்சியாளர்களும் வரவு-செலவு திட்டத்தை ஆடவர் மகளிர் சரிநிகர் கண்ணோட்டத்துடன் அமைக்க உந்துதலாக இருந்தது. இதன் இரண்டாவது கட்டம் 2005இல் துவங்கப்பட்டது. இந்த திட்டத்தின் முக்கிய குறிக்கோள்கள் இரு பாலினர்க்கான ஆய்வை அரசு வரவு-செலவு திட்டங்களில் பயன்படுத்துதல்; பொறுப்பு, பங்கேற்பு மற்றும் தேசிய வரவு-செலவு திட்டமிடுதலில் இரு சாரார்க்கும் அடிப்படையிலான குறிப்பை உணர்த்துதல் போன்றவற்றை அதிகரிப்பதற்காக ஆண்-பெண் சமத்துவ அடிப்படையிலான திட்டமிடுதலை ஒரு கருவியாக பயன்படுத்தல் ஆகும்.

"ஆண்-பெண் சரிநிகர் சமநிலை மேம்பாடு மற்றும் அமைதி என்னும் இலக்குகளைப் புரிந்து எட்டிப்பிடிக்க வட்டார, தேசிய மற்றும் சர்வதேச அளவில் ஆண்-பெண் சமத்துவ சமநிலைக்கு உத்தரவாதம் தரும் குறிப்பிட்ட செயல்பாடுகளுக்கு தேவையான மனித வளம், நிதி மற்றும் வள ஆதராங்களின் ஒதுக்கீடும், ஏராளமான பன்னாட்டு ஒத்துழைப்பும் பக்கபலமாய்த் தேவைப்படுகின்றன. மேலும், வட்டார தேசிய மற்றும் சர்வதேச வரவு-செலவு திட்ட செயல்வளர்முறைகளில் இந்த இலக்குகளுக்கு வெளிப்படையான முக்கியத்துவம் (அ) முன்னுரிமை அளித்தல் இன்றியமையாததாகிறது."

- ஐ.நா. பொதுக்குழு,

செயல்பாட்டுத் தளம், 2000

உலக அளவில், ஆடவர் மகளிர் சரிநிகர் வரவு-செலவு திட்ட முயற்சிகள், பல நாடுகளில் முற்போக்கான வளர்ச்சி நிலைகளை எட்டிப்பிடித்து வருகின்றன. ஒவ்வொரு நாடும் வெவ்வேறு வழிமுறைகளையும் செயல்முறைகளையும் பின்பற்றுகின்றன. பல்வேறு வகையான கூட்டு முயற்சிகளுடன் செயல்படுகின்றன. 2004ஆம் ஆண்டு வரையில் அறுபதுக்கும் மேற்பட்ட நாடுகள், தங்கள் அரசு வரவு-செலவு திட்டங்களின் ஆடவர் மகளிர் அடிப்படைலான தாக்கத்தை அறியவும், தங்கள் நாட்டு மகளிருக்கு போதுமான நிதியுதவி சென்றடைகிறதா என்பதை உறுதி செய்யவும் புதிய அடிப்படையிலான வரவு-செலவு திட்ட (ஆய்வு-அளவுகோல்) முன்முயற்சிகளை அறிமுகப்படுத்தி வருகின்றன.

**"இலக்குகளை அடைய, தேசிய மேம்பாட்டு உத்திகளும் வரவு செலவு திட்ட ஒதுக்கீட்டு அளவு, அவற்றுடன் இணைக்கப்படவேண்டும். இதற்காக, (மேம்பாட்டிற்கான உலகளாவிய) பங்கேற்பாளர் என்கிற அளவிலும், போதிய நிதி வழங்குதல் மூலமும், பரஸ்பர பொறுப்புணர்வு என்கிற அளவிலும் பக்கபலம் கிடைத்திட வேண்டும்".**

**- பான் கி மூன், ஐ.நா.பொதுச் செயலாளர்.**

**ஆண்-பெண் சரிநிகர் வரவு-செலவு திட்டம் கீழ்க்காண்பவற்றை பயன்படுத்துகிறது.**

- **ஆண்-பெண் சரிநிகர் கண்ணோட்டத்துடன் அரசு செலவு மற்றும் வரவுகளை ஆய்வு செய்தல்.**
- **ஆண்-பெண் சரிநிகர் நோக்கத்துடனான ஒதுக்கீடுகளின் துறைகளுக்கிடையிலான ஒப்பீட்டாய்வு (உ.ம்.) பெண்களை இலக்காகக் கொண்ட சிறப்புத் திட்டங்கள்.**
- **ஆண்-பெண் சரிநிகர் மீறும் பாகுபாட்டால் அனைத்து துறைகளிலும் பெண்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி அதனால் விளைந்த பல்வேறு தாக்கங்கள் குறித்த ஆய்வு.**
- **சமநிலை வாய்ப்புகள், அதற்கொப்ப கொள்கைகள் மற்றும் அரசு துறைகளுக்குள் நிதி ஒதுக்கீடுகள் போன்றவற்றின் மறு ஆய்வு.**

## ஆடவர் மகளிர் சரிநிகர் வரவு-செலவு திட்டம் - கருத்தாக்கம்

1980களிலிருந்து தேசிய வரவு-செலவு திட்டங்களில் ஆண்-பெண் சமத்துவ அடிப்படையிான கண்ணோட்டத்தை ஒருங்கிணைக்க ஆரம்ப கட்ட முயற்சிகள் மேற்கொண்டதிலிருந்து நாம், கண்ணோட்டங்கள் மற்றும் செயல்முறைகளில் காலம் தாழ்த்திவிட்டோம். மகளிருக்கான வரவு செலவு திட்டம் என்பது ஒரு கட்டம். அடுத்து, இரு பாலர்க்கும் சரிநிகர் வரவு திட்டம் (அதாவது மகளிர் மீது மட்டும் கவனம் செலுத்தாது ஆண்களுக்கும் மகளிருக்கும் பயன்படும் வரவு செலவுகளுக்கு முக்கியத்துவம் செலுத்துவதை இது பிரதிபலிக்கிறது). மேலும் அவற்றிலிருந்து வரவு செலவு திட்டத்தில் ஆண்-பெண் சரிநிகர் கண்ணோட்டத்தை முன்னுரிமைப்படுத்துவதில் நிதானமான வளர்ச்சி இருக்கிறது. (ஆண்-பெண் சரிநிகர் என்கிற அடிப்படையில் மகளிருக்காக தனி வரவு-செலவு திட்டத்தை தயாரிப்பது நோக்கம் அல்ல, மாறாக தொடர்புள்ள இரு பாலர்க்கும் உரிய அடிப்படையிலான கண்ணோட்டத்தை அனைத்து வரவு-செலவு திட்ட நடைமுறை அமலாக்க முறைகளில் உள்ளடக்குவதே). இதுவே இன்றைய நிலையில் 3வது கட்டத்தை நோக்கி நம்மை நகர்த்துகிறது.

"இரு பாலர்க்கும் உரிய மற்றும் மேம்பாடு" குறித்த அனைத்து ஆய்வுகளும் ஒரு பொதுக்கருத்தையே முன்னிலைப்படுத்துகின்றன. மேம்பாட்டு செயல்முறையின் விளைவுகளில் மற்ற காரணிகளின் தொடர்பின்றி, எப்பொழுதும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் கிடைக்கும் பலன்களில் குறிப்பிட்ட ஒரு வேறுபாடு இருக்கிறது. அரசு வரவு-செலவுத் திட்டங்கள் ஆண்-பெண் சமத்துவ நடுநிலையோடு இருந்ததே இல்லை. அதாவது, அரசு செலவினமும் வருவாயும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமான பலன்கள், விளைவுகளை உருவாக்கியதே இல்லை.

**இரு பாலர்க்கும் உரிய வரவு-செலவுத் திட்டத்தை அறிமுகம் செய்யும் முயற்சிகள் ஆய்வுக் கருவிகளோடும் தொடர் செயல் முறைகளோடும் உள்ள ஓர் ஆய்வு அணுகுமுறை தேவை. இதுவே அரசு வரவு-செலவுத் திட்டங்கள் வடிவமைப்பு செய்தலிலும் திட்ட நிதி ஒதுக்கீடுகளை செய்வதிலும் "ஆண்-பெண் சமத்துவத்துக்குரிய பகுப்பாய்வு"தனை பயன்படுத்தும் விதமாக உருவாக்கப்பட வேண்டும். ஆண்கள் மற்றும் பெண்கள், சிறுவர்கள் மற்றும் சிறுமியர்கள் மீது நடப்பு ஆண்டு வரவு-செலவு திட்ட அரசு கொள்கைகளினால் விளையும் வேறுபட்ட தாக்கங்களை அறிய ஒரு செயல்நுட்பத்தை வழங்குவதும் அரசு பொது கொள்கைகளின் செயல்முறைகளில் ஆண்-பெண் சமத்துவ பாகுபாடுகளை இணைப்பதுமே இதன் நோக்கமாகும்.**

பல்வேறு நாடுகளில் மேற்கொள்ளப்படும் இரு பாலர்க்கும் உரிய வரவு-செலவுத் திட்ட முயற்சிகள் கீழ்க்காணும் கேள்விகளுக்குப் பதிலளிக்க முயன்றிருக்கின்றன.

- வருடாந்திர வரவு-செலவுத் திட்டத்தில், பல்வேறு துறைகளுக்கு அல்லது பணிகளுக்குமான ஒதுக்கீடுகளின்படி அரசின் திட்ட முன்னுரிமைகள் யாவை?

- இரு பாலர்க்கும் அடிப்படையிலான சமநிலை இடைவெளிகளைக் களைந்தெறிய அரசு மேற்கொண்ட குறிப்பிட்ட நடவடிக்கைகள் மற்றும் அவற்றிற்கான நிதி ஒதுக்கீடு என்ன?

- அந்தந்த ஆண்டிற்கான திட்ட நடவடிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் ஒதுக்கப்பட்ட நிதி முறையாகச் செலவழிக்கப்படுகிறதா?

- இரு பாலர்க்கும் சமமான பயன் தருவதாக உருவான திட்டங்களில் உண்மையான செலவினங்களின் பகிர்மானம் எந்த அளவு எப்படி சமநிலை எட்ட உதவியாக உள்ளது? (உ.ம்.) ஆரம்ப கல்விக்கான மாநில செலவினத்தில் சிறுவர்களும் சிறுமிகளும் பெற்ற உண்மையான பங்குகள் எவ்வளவு?

- சில நாடுகளில், பெண்கள் தங்களுக்கு முக்கியமெனக் கருதும் பணிகளுக்கு ஒதுக்கப்பட்ட மற்றும் செலவழிக்கப்பட்ட உண்மையான வளம்/நிதியை பகுப்பாய்வு செய்ய பயிற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஒதுக்கீடுகள் பார்வையில், உண்மையான நிதி சார்ந்த சாதனைகளை மதிப்பிடுவதைக் காட்டிலும் எந்த அளவு வரவு-செலவு செயல்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதைக் கணிக்க முயற்சிகள் எடுக்கப்படுகின்றன?

- வரவு-செலவுத் திட்டத்தை இரு பாலருக்கும் உரியதாக ஆக்குவது என்பது பெண்களுக்கு வளங்களின் பங்கை அதிகரிக்கப் பேரம் பேசுவதும் அல்ல. அல்லது அவர்களுக்ககாக ஒரு தனி வரவு-செலவுத் திட்டத்தை உருவாக்குவதும் அல்ல. மாறாக, வரவு-செலவுத் திட்டச் செலவினங்களை இரு பாலருக்கும் உரிய பார்வையில் பகுத்தாய்வு செய்வதே நோக்கமாகும்.

இரு பாலர்க்கும் உரிய வரவு-செலவுத் திட்டமிடுதல் ஒவ்வொரு பாலினத்தார்க்கும் உரியவைகளை உரிய வகைகளில் கொண்டு சேர்க்கிறதா? என்பதை வெளிக்கொண்டு வரும் நோக்கம் உடையது. மேலும் அரசு பொதுக்கொள்கைகளை முன்னிலைப்படுத்தும் அறிவுசார் ஆய்வு நடைமுறைப் பயிற்சிகளை உள்ளடக்கியது. இதற்குத் தேவையான தகவல்களை நிதிநிலை அறிக்கைகளில் இருந்தும் அலுவலக ஆவணங்களிலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம். அரசின் பல்வேறு கொள்கைகளின் மதிப்பை அளவிடவும், ஆண்களும் பெண்களும் அதன் மூலம் அடையும் பயன்களை அல்லது செலவினங்களைக் கணிப்பதுமே இதன் பொதுவான நோக்கமாகும்.

இரு பாலர்க்கும் உரிய பொறுப்பான, சரிநிகர் வரவு-செலவுத் திட்டம் என்பது மகளிரின் தேவைகளுக்கும் உண்மையில் ஒதுக்கப்பட்ட நிதியளவு மற்றும் அரசின் செலவினத்திற்குமான ஒப்பீட்டின் ஆய்வாகும்.

**"ஆண்-பெண் சமத்துவ அடிப்படையிலான வரவு-செலவுத் திட்டமிடுதல் என்பது மகளிருக்காக அதிகமான நிதி ஒதுக்கீட்டையோ அல்லது பெண்களுக்கான தனி வரவு-செலவுத் திட்டம் உருவாக்கவோ கோரவில்லை. ஆண்-பெண் சமத்துவ அடிப்படையிலான கண்ணோட்டத்துடன் நிதிநிலையறிக்கையில் செலவுகளை ஆராய்தலே இதன் முக்கிய நோக்கமாகும்".**

# பாகம் II

## இந்தியாவில் ஆடவர் மகளிர் சரிநிகர் வரவு-செலவு திட்டமிடுதல்

3. தேசிய நிலவரம்

4. இந்திய மாநிலங்களில் நிலவரம்

5. பெண்களுக்கான சிறப்புக் கூறு திட்டம் - முன் வந்த மாதிரிப் படிவத்தின் ஓர் உருமாற்றமா ?

## இந்தியாவில் இரு பாலருக்கான சரிநிகர் வரவு-செலவு திட்டம்:

இந்தியாவில், **1974ஆம் ஆண்டு, இந்தியாவில் மகளிரின் நிலை குறித்த செயற்குழு தந்த 'சமத்துவத்தை நோக்கி'** என்ற அறிக்கை அரசு செலவினத்தின் இரு பாலருக்குமான கண்ணோட்டத்தை கொண்டு வரும் ஆரம்ப உந்துதலாக இருந்தது.

எட்டாவது ஐந்தாண்டு திட்டம் (1992-97), முதன்முறையாக பொது மேம்பாட்டு துறைகள் மூலம் பெண்களுக்கான நிதி ஒதுக்கீட்டை உறுதி செய்வதற்கான தேவையை முன்னிலைப்படுத்தியது.

> "பல்வேறு துறைகளில் மேம்பாட்டு திட்ட பலன்கள் மகளிருக்குக் கிட்டாமல் போய்விடக்கூடாது. மகளிருக்கான சிறப்பு திட்டங்கள் அனைவருக்கும் பொது மேம்பாட்டுத் திட்டங்களை நிறைவு செய்யும் வண்ணம் அமைய வேண்டும். பொது மேம்பாட்டுத் திட்டங்கள், தமது பங்காக, இரு பாலருக்கும் உரிய பகிர்தலை அதிகமாகப் பிரதிபலிக்க வேண்டும்".

இருப்பினும், பெண்களுக்கான நிதி ஒதுக்கீடும் பலன்களும் அவர்களுக்கு முழுமையாகச் சென்றடைகிறதா என்பதை உத்தரவாதப்படுத்துவதில் செய்வதில் அதிக முன்னேற்றம் ஏற்படவேயில்லை.

**ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டம் தான் (1997-2002) "நிதியும் / பலன்களும் பெண்கள் தொடர்பான துறைகளுக்கு 30 சதவீதத்திற்கு குறைவின்றி ஒதுக்கப்படவேண்டும்"** என்பதை உறுதி செய்ய மத்திய மற்றும் மாநில அரசுகளை வழிநடத்தி மகளிருக்கான சிறப்பக்கூறு திட்டத்தை முக்கிய உத்திகளில் ஒன்றாக எடுத்துக்கொண்டது. அத்திட்டமே, குறிக்கப்பட்ட நிதிகள் அல்லது பலன்கள் தொடர்ந்து கிடைக்கின்றனவா என்பதைச் சிறப்பான விழிப்போடு கண்காணிக்கக் கட்டளை இட்டது. அதன்படி, மகளிர் சக்கியூட்டுதலுக்கான ஒரு முழுமையான அணுகுமுறையைப் பரிந்துரைத்தது. அதற்கேற்ப உத்தியை உருவாக்க உதவுகின்ற ஒரு வழிமுறையால் உறுதிசெய்யவும் திசைவழி காட்டியது.

மேலும், மகளிர் முன்னேற்றத்திற்கு 1998இல், **இந்திய அரசின் மகளிர் மற்றும் குழந்தை நல மேம்பாட்டுத் துறை,** நாடு முழுவதிலுமிருந்து '**ஆண்-பெண் சமத்துவ தொகுப்பு தகவலை**' உருவாக்கும் முன்னோடி முயற்சியை மேற்கொண்டது. ஆண்-பெண் இருபாலர் அடிப்படையிலான வளர்ச்சிக் குறியீடு மற்றும் இருபாலருக்கும் உரிய சக்தியூட்டும் நடவடிக்கைகளை உருவாக்க, மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசங்களுடனான தொடர் கலந்தாலோசனைகள் மூலமாக, மாநில / மாவட்ட அளவில் ஆண்-பெண் தனித்தனி தகவல் சேகரிப்பிற்கான **18 சுட்டும் குறிப்புகள்** அடையாளங் காணப்பட்டன. (ஆனால் இந்த முயற்சிகளுக்கான பலன்கள் ஊக்குவிக்கும் விளைவுகளை ஏற்படுத்தவில்லை)? (காண், பக். 16)

## 18. ஆண்-பெண் சரிநிகர் வளர்ச்சி குறியீடு மற்றும் ஆண்-பெண் சமத்துவ அதிகாரம்

## அதிகரிப்பு முயற்சிகளுக்கான 18 குறிப்புகாட்டிகள் / குறிகாட்டிகள்

1. ஆண்-பெண் விகிதாச்சாரம்
2. ஆண்-பெண் விகிதம் (0-6 வயது)
3. ஆண்-பெண் இறப்பு விகிதம் (15-35 வயது)
4. ஆண்-பெண் இறப்பு விகிதம் (0-5 வயது)
5. வளக் கட்டுப்பாட்டின் பதிலி குறிப்பு காட்சி
6. முக்கிய வேலையாட்களுள் களம் சாரா ஆண், பெண் வேலையாட்களின் சதவிகிதம்.
7. விளிம்பு நிலை / துணை வேலையாட்களில் (ஆண்-பெண்) விவசாய கூலியாட்களின் சதவிகிதம்.
8. ஆண்களுக்கும் பெண்களுக்கும் விவசாய தினக்கூலி
9. வட்டார அமைப்புகள் மத்திய / மாநில அரசாங்கத்தில் (ஆண்-பெண்) வேலை வாய்ப்பு
10. இடைநிலைக் கல்வி - பெண்கள் நிலை
11. பள்ளி வருகை (6-14 வயது) - பெண்கள் நிலை
12. முக்கிய மற்றும் விளிம்பு நிலை WPR - பெண்கள் நிலை
13. ஆண்கள் மற்றும் பெண்கள் படிப்பறிவு விகிதம்
14. இயற்கை மரணம் அல்லாத மரணம் (ஆண்-பெண்) ஒரு இலட்சத்திற்கு
15. பெண்களுக்கு எதிரான (மரணத்திற்கு இட்டுச்செல்லாத) குற்றங்களின் சதவிகிதம்
16. குடும்ப கட்டுப்பாடு செய்த ஆண்கள் மற்றும் பெண்களின் சதவிகிதம்.
17. மத்திய / மாநில தேர்தல்களில் வாக்களித்த, போட்டியிட்ட மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்கள்
18. பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதவிருக்கும் சிறுவர், சிறுமிகளின் சதவிகிதம்.

புதுதில்லியில், ஜுலை 2000இல் நடைபெற்ற **'தெற்காசிய பகுதியின் தேசிய வரவு செலவு திட்டங்களை ஆண்-பெண் சரிநிகர் அடிப்படையில் அமைப்பது'** குறித்த **பெண்களுக்கான ஐ.நா. வளர்ச்சி நிதியம் பயிலரங்கத்தில்** திட்டக்குழு மற்றும் அரசாங்க பிரதிநிதிகள், ஐ.நா. முகவாண்மை, ஊடகம், ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் குடியுரிமை சமூகத்தின் உறுப்பினர்கள் பங்கேற்றனர். (இந்தியாவில் ஆண், பெண் அடிப்படையில் உறுப்பினர்கள் பங்கேற்றனர். இந்தியாவில் இரு பாலருக்கும் உரிய வரவு-செலவு திட்டம் அமைவதற்கு இது இன்னொரு அடித்தளமாகும்).

தேசிய பொது நிதி மற்றும் கொள்கைக்கான தேசிய நிறுவனம் (என்.ஐ.பீ.எஃப்,பீ.) ஆகஸ்ட் 2001இல் 2வது அறிக்கையைக் கொடுத்தது. அதில் '2001-02க்கான மத்திய வரவு செலவுத் திட்டத்தின் பின்நிதி நிலை' பற்றிய மதிப்பீடு செய்தது. இந்த அறிக்கை அரசாங்க செலவினத்தை மூன்று வகைகளாகப் பிரித்துள்ளது.

1. மகளிரையும் சிறுமிகளையும் இலக்காகக் கொண்ட செலவினம் அளவு:

2. மகளிருக்கு ஆதரவான ஒதுக்கீடுகள் (மகளிர் கூறு திட்டத்தின் சலுகைகளுக்கான இணைந்த செலவினம்) அளவு/விகிதம்:

3. ஆடவர், மகளிர் மீது வேறுபட்ட தாக்கத்தை ஏற்படுத்தும் தேசிய நிலை பொது செலவினம்.

2004-05இல் மகளிர் மற்றும் குழந்தை நல மேம்பாட்டு அமைச்சகம் 'ஆடவர், மகளிர் சமத்துவம் கொணரும் வரவு செலவுத் திட்டத்திற்கான' செயலூக்க அறிக்கையைத் தனக்கெனத் தேர்ந்தெடுத்தது. இதனை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் உருவாக்கப்பட்டு அனைத்து அமைச்சகங்களுக்கும் பரிந்தனுப்பப்பட்டன. (காண்: பக். 18, 19)

**இலக்கு அறிக்கை**

**"பாலின சரிநிகர் சமநிலைக்கான வரவு-செலவுத் திட்டமிடுதல்"**

Broad Framework Of Activities

- **மத்திய, மாநில மற்றும் உள்ளாட்சி வரவு-செலவுத் திட்டங்களிலும் செலவினத்திலும் மகளிருக்கான ஒதுக்கீட்டை அளவிடுதல்.**
    - வழிமுறைகளைச் சீராக்கி, நெறிபடுத்துதல் மற்றும் செயற்கருவிகளின் மேம்பாடு.
    - போக்கும் ஆய்வும்.
    - பல்வேறு பணிகளுக்கான ஒதுக்கீடுகளில் முக்கியத்துவங்களின் மற்றும் அமைப்பின் மாற்றம் குறித்த ஆய்வு.
    - உண்மையாக செலவழிக்கப்பட்ட நிதிக்கும் ஒதுக்கப்பட்ட நிதிக்குமான வேறுபாடுகள்.
    - இலக்குகளைப் பின்பற்றுதல் / கடைபிடித்தல்.
- **மத்திய மாநில அளவில் அரசாங்க கொள்கைகளின் பாலின அடிப்படையிலான தணிக்கை:**
    - கடன் வழங்கு கொள்கை, வரி முதலான பெருநிலை கொள்கைகளை வழிகாட்ட ஆராய்ச்சி மற்றும் நுண்ணிய நிலை ஆய்வுகள்.
    - பாலின சமநோக்குடைய கொள்கைகளின் தாக்கத்தை அடையாளங் காணல்.
    - பாலின அடிப்படையிலான பாகுபாடுகளை நிவர்த்தி செய்வது குறித்து பெண்களுக்கு ஏற்ற செயல்திட்டங்களை அடையாளங் காண நுண்ணிய நிலை ஆய்வுகள்.
- **மத்திய மற்றும் மாநில வரவு-செலவுத் திட்டங்களில் பல்வேறு சலுகைகளின் தாக்க மதிப்பீடு.**
    - பயன்கள் குறித்த ஆய்வுகள் மீதான நுண்ணிய நிலை ஆய்வுகள்.
    - பணிகளை நடைமுறைப்படுத்த தேவையான செலவினங்களின் ஆய்வுகள்.

- **படிப்பறிவு, பேறுகால இறப்பு விகிதம், பணிகளின் பங்கேற்பு போன்ற முக்கிய குறியீடுகள் பிரதிபலித்தபடி, பெண்களின் சமூக நிலையில் திட்டங்கள் ஏற்படுத்தும் தாக்கத்தை, அதே கண்ணோட்டத்துடன் ஆராய்தல்.**
- **பாலின தகவல் ஆக்கம் மற்றும் சேகரிப்பை நிருவகித்தல்.**
  - செயலாக்க முகவாண்மைகளில் இருந்து பெறும் விளக்கங்களுக்கு □□□-ஐ உருவாக்குதல்.
  - தேசிய, மத்திய கணக்கெடுப்பு நிறுவனங்கள் போன்ற நிறுவனங்கள் நடத்தும் கணக்கெடுப்புகளில் தகவல் சேகரிப்பிற்கான புதிய குறிப்புகளை உட்படுத்துதல்.
- **கலந்தாலோசனை மற்றும் திறன் வளர்த்தல்.**
  - சிறந்த நடைமுறைப்படுத்தப்பட்ட பழக்கங்களுக்கான பரிமாற்றம் மற்றும் ஆய்வுகளை மேற்கொள்ளல்;
  - தகவல் பரிமாற்றங்களுக்கான செயல்வழிமுறைகளையும் கருவிகளையும் மேம்படுத்துதல்;
  - பயனாளிகள் மற்றும் வல்லுநர்களுக்கு இடையேயான கூட்டு மற்றும் பொதுமன்றங்களை ஏற்படுத்துதல்;
- **பங்கேற்பில் செயல்முறைகளை நிறுவ ஏற்படுத்தி மேற்கொண்ட, முடிவு எடுக்கும் செயல்முறைகளின் மறுபார்வை - இத்தகு செயல்முறைகளில் மகளிரின் நடைமுறை பங்கேற்பில் மறுபார்வை. முடிவு எடுப்பதில் பாலின சமநிலை மற்றும் மகளிரின் கூடுதலான பங்கேற்பை இலக்காகக் கொண்ட முன்மாதிரிகளை நிறுவுதல்.**
- **பராமரிப்பு பொருளாதாரம், பொறுப்புகளை கவனிப்பதற்கான சம்பளம் செலுத்தப்படாத பணி முதலான கணக்கில் வராத பணிகளின் மூலம் மகளிர் பொருளாதாரத்திற்குப் பங்களிப்பதைச் சரியாக படம்பிடித்துக் காட்டவல்ல ஒட்டுமொத்த கணக்குளின் உருவாக்கம் மற்றும் பிரதிபலிப்பு.**

மூலம்: 'பாலின சரிநிகர் சமநிலை எய்தி வரவு-செலவு திட்டமிடுதல்" ஆண்டு அறிக்கை 2004-05, மகளிர் மற்றும் குழந்தைகள் நல மேம்பாட்டு அமைச்சகம், இந்திய அரசு.

"மக்கள் தொகையில் ஒரு பாதி மகளிர் என்பதையும் எல்லாத் திட்ட நிரல்களிலும் சலுகைத் திட்டங்களிலும் சமமான பங்குக்கும் சமத்துவத்தோடு பேசுவதற்கும் அவர்களுக்கு உரிமை உண்டு என்பதையும் கொள்கையை உருவாக்குபவர்கள் அவ்வப்போது மறந்திட முனைகிறார்கள் என்பதை மனமார ஒத்துக்கொள்கிறன்".

***- நிதியமைச்சர் ப. சிதம்பரம், வரவு செலவுத் திட்ட விளக்கப்பேச்சு, இந்திய அரசு, 2008-09, மத்திய வரவு-செலவுத்திட்டம்***

**2008-09 மைய அரசின் வரவு-செலவுத் திட்டத்தில் மகளிர் எங்கே உள்ளனர்?**

- **மகளிருக்கான மொத்த ஒதுக்கீடுகள் மிகச் சிறிய அளவிலேயே அதிகரிப்பைக் காட்டுகின்றன. (ஆடவர் மகளிர் சரிநிகர் வரவு-செலவுத் திட்ட அறிக்கையின்படி) அரசின் மொத்தச் செலவினத்தில் 3.3%லிருந்து 3.6% சதவீதமாக, சுமார் 0.3% அதிகரிப்பே காட்டப்படுகின்றது. ஆடவர் மகளிர் சரிநிகர் வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் அமைச்சகங்கள் மற்றும்** துறைகள் ஆகியவற்றின் எண்ணிக்கை (33 மானியக் கோரிக்கைகள்) மாறாத எண்ணாகவே தரப்பட்டுள்ளது. இதெல்லாம் ஏமாற்றமளிக்கக் கூடியவையே.

- விவசாயத்தில் பெண்களுக்கெனக் குறிப்பான ஒதுக்கீடுகளின்படி (2007-08 திருத்த மதிப்பீடு) 2.52%லிருந்து (2008-09 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு)படி 3.66%வரை அதிகரித்துள்ளது. இந்த அதிகரிப்பு விவசாயத்தின் மொத்த ஒதுக்கீடுகளோடு கணக்கிடப்பட்ட சதவீதம் ஆகும்.

- **உயர் கல்வியில், மகளிருக்கான முன்னுரிமையில் பின்னடைவு:** (2007-08 திருத்த மதிப்பீடு அளவு) **19.72%லிருந்து** (2008-09 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு) **17.13%மாகக் குறைக்கப்பட்டுள்ளது.**

- **பெண்களில் மூன்றில் ஒரு பகுதியினர் அமைப்புசாராத் தளத்தில் ஈடுபட்டிருப்பது ஓர் உண்மை. அதைக் கருதும்போது, 2008-09 மத்திய வரவு-செலவுத் திட்டத்தில், சமூகப் பாதுகாப்பு கட்டாயமாகக் காட்டப்படவேண்டிய பல பயன்பாடுகள் பெரிதும் உதாசீனம் செய்யப்பட்டுள்ளன என்பதைக் காண ஏமாற்றமே மிஞ்சுகிறது.**

- மத்திய நிதிநிலையறிக்கை 2008-09க்கு பதில் அறிக்கை.,

- வரவு செலவு திட்டம் மற்றும் ஆளுமை பொறுப்பிற்கான மையம், (சி.பி.ஜி.ஏ.)

இந்திய அரசின் 11வது ஐந்தாண்டு திட்டத்தின் 2006ஆம் ஆண்டு அணுகுமுறை அறிக்கை உறுதியாகத் தெரிவித்தது, இது :

> "11வது ஐந்தாண்டு திட்டத்தின் முக்கிய அம்சமாக ஆடவர், மகளிர் அதிகாரமூட்டுதல் மற்றும் சமத்துவத்திற்கான சிறப்பு நடவடிக்கைகள் இருக்கும். இருபாலர் சமத்துவம் அடைவதற்கு அமைச்சகங்கள் மற்றும் துறைகளின் திட்டங்களிலும் கொள்கைகளிலும் போதுமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்க வேண்டும். மேலும், **ஆடவர், மகளிர் சரிநிகர் வரவு-செலவு திட்ட ஒதுக்கீட்டை கட்டாயம் பின்பற்றவும் (என்ற குறிப்பையும்) அது உள்ளடக்கியுள்ளது.** அரசு திட்டங்களில் குறைந்தபட்சம் 33 சதவிகிதம் நேர்முக மற்றும் மறைமுக பயனாளிகள் பெண்கள் மற்றும் சிறுமிகள் என்பதை உறுதி செய்வதே இந்த பதினொன்றாவது திட்டத்தின் சமூக மற்றும் பொருளாதார ரீதியாகக் கண்காணிக்கப்படும் இலக்குகளில் ஒன்று ஆகும்".

பதினொன்றாவது திட்டத்திற்கான, மகளிருக்கு அதிகாரமளித்தல் மற்றும் குழந்தை நல மேம்பாட்டிற்கான முனைப்பு குழு வலியுறுத்தியது யாதெனில் பதினொன்றாவது திட்ட காலத்தில் ஆண்-பெண் சமத்துவ அடிப்படையிலான வரவு-செலவுத் திட்டமிடும் சிறு குழு அமைப்புகள் அனைத்து அமைச்சகங்களிலும் துறைகளிலும் தொடங்கப்படும். மற்றும் மத்திய மற்றும் மாநில அரசின் ஒவ்வொரு துறையும் அமைச்சகமும் விளைவுகளை மதிப்பிட ஒழுங்கான, முழுமையான கண்காணிப்பு மற்றும் தணிக்கை செயல்நுட்பத்தை கொண்டு வரும். அது குறிப்பிட்டதாவது பதினொன்றாவது திட்ட காலத்தில் ஆடவர்-மகளிர் சரிநிகர் வரவு-செலவுத் திட்டமிடுதல் சிறு குழு அமைப்பு மகளிர், குழந்தை நல மேம்பாட்டு அமைச்சகத்தில் (MWCD) மேம்படுத்தப்பட்டு வலுப்படுத்தப்படும். **மாநிலங்களும் யூனியன் பிரதேசங்களும்** "களத்தின் அனைத்து மேம்பாட்டு திட்டங்களை செயல்படுத்தும் முகவாண்மைகள்" என்பதால் அவற்றில் இரு பாலருக்கும் உரிய வரவு-செலவுத் திட்டமிடுதலைப் பின்பற்றும் தேவை குறித்தும் இக்குழு வலியுறுத்தியது.

## <u>மாநிலங்களுக்கு ஆடவர் மகளிர் சரிநிகர்</u>
## <u>வரவு-செலவுத் திட்டமிடுதலைக் கொண்டு செல்லுதல்</u>

"மகளிர் மற்றும் குழந்தைகள் நல மேம்பாட்டு அமைச்சகம், அனைத்து பொது செலவின திட்டங்களின் செயலாக்கத்தில் முக்கியப் பங்கு வகிப்பதாலும் மகளிருக்கான ஒதுக்கீட்டிற்கு பெருமளவு பங்கு அளிப்பதாலும் **மாநில அரசுகள்** ஆடவர் மகளிர் சரிநிகர் வரவு-செலவுத் திட்டமிடுதலின் முன்னோடி முயற்சிகளை மேற்கொள்வதின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியது. மாநிலங்களிடம் ஒப்படைக்கப்பட்ட மத்திய அரசு முன்கொண்டு திட்டங்களின் ஆடவர் மகளிர் சரிநிகர் செயலாக்கத்திலும், **மாநில வரவு செலவுத் திட்டங்களில்** ஆடவர் மகளிர் சரிநிகர் அம்சங்களை உள்ளடக்குவதிலுமே ஆடவர் மகளிர் சரிநிகர் வரவு-செலவுத் திட்டமிடுதலின் வெற்றி உள்ளடக்கியுள்ளது.

"பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டம் மற்றும் ஆண்டுத் திட்டம் 2007-08 குறித்து மாநிலங்களுக்கு வழங்கப்பட்ட விளக்கத்தின் ஒரு பகுதியாக, அனைத்து **மாநில அரசுகளும்** தங்களது திட்டமிடுதல் செயல்முறையின் ஒரு பகுதியாக ஆடவர் மகளிர் சரிநிகர் வரவு-செலவுத் திட்டமிடுதல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று திட்டக்குழு ஆணையிட்டுள்ளது."

*□ - "ஆடவர் மகளிர் சரிநிகர் வரவு செலவு திட்டமிடுதல் - ஆடவர் மகளிர் சமநிலை வரவு-செலவுத் திட்டமிடுதல், ஆண்டறிக்கை 2006-07, மகளிர் மற்றும் குழந்தைகள் நல மேம்பாட்டு அமைச்சகம், இந்திய அரசு".*

**இரு பாலருக்கான சரிநிகர் வரவு-செலவுத் திட்டங்கள் - மாநிலங்கள்**

பொது நிதி மற்றும் கொள்கைக்கான தேசிய அமைப்பின் பல்வேறு அறிக்கைகள் ஆடவர், மகளிர் சரிநிகர் கண்ணோட்டத்துடன் மாநில வரவு-செலவு திட்டங்களை ஆராய்வதற்கான தேவையை உணர வழிவகுத்திருக்கின்றன. ஏனெனில், மகளிருக்கு அதிகாரமளித்தல், அவர் தம் நலம் மற்றும் மேம்பாட்டின் மீது தாக்கம் செலுத்தக்கூடிய சமூகத்துறையின் செலவினத்திற்கு மாநிலங்களும் யூனியன் பிரதேசங்களும் பெருமளவில் பொறுப்பாகின்றன.

2001 டிசம்பர் மாதத்தில் 22 மாநிலங்களிலும் ஆடவர், மகளிர் சரிநிகர் வரவு-செலவுத் திட்டம் பற்றிய ஆய்வினை ஒருங்கிணைக்கும் பணியை பொது ஒத்துழைப்பு மற்றும் குழந்தை மேம்பாட்டிற்கான தேசிய அமைப்பிடம் (NIPCCD) மகளிர் மற்றும் குழந்தைகள் நல மேம்பாட்டு அமைச்சகம் ஒப்படைத்தது.

இதற்கான ஆய்வு செயல்முறை மிகவும் எளிமையானது. அடிப்படையில் இது இவை போன்ற மாநில வரவு-செலவுத் திட்ட ஆவணங்களில் இருந்தும் கீழ்க்காணும் திட்டங்களில் இருந்தும் தேவையான தகவலைச் சேகரித்தல் ஆகும்.

- **மகளிருக்கான / அவர்களை இலக்காகக் கொண்ட திட்டங்கள்** (மகளிருக்கான 100 சதவிகித ஒதுக்கீடு கொண்ட திட்டங்கள்).
- **மகளிருக்கு ஆதரவான திட்டங்கள்** (மகளிருக்காக குறைந்தபட்சம் 30 சதவிகித ஒதுக்கீட்டைக் கொண்ட திட்டங்கள் அல்லது பெருமளவு அவர்களுக்குப் பயனளிக்கும் திட்டங்கள்).
- **வேறுபாடில்லாமல் எல்லாருக்கும் உரிய திட்டங்கள்** (பொதுவாக சமூகத்திற்கான திட்டங்கள்).

பெண்களின் சமூக நிலையில் ஏற்படுத்தும் தாக்கத்தின் அடிப்படையில் 4 பிரிவுகளாக இத்திட்டங்களைப் பிரிக்கலாம். அவை:

- பெண்களுக்கான / அவர்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கான சமூகப் பாதுகாப்பு மற்றும் நலப் பணிகள்
- சமூகப் பணிகள்
- பொருளாதார பணிகள்
- அவர்களுக்கான பணிகளை முறைப்படுத்தும் மற்றும் விழிப்புணர்வு உருவாக்கப் பணிகள்

ஆய்வுக்காக கீழ்க்காணும் 6 துறைகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

- மகளிர் மற்றும் குழந்தைகள் நல மேம்பாட்டுத்துறை
- நலவாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை
- சமூக நலத்துறை
- ஊரக வளர்ச்சி மேம்பாட்டுத் துறை
- கல்வித்துறை
- விவசாயத் துறை

**NIPCCDயின் முன்னோடி முயற்சி மற்றும் குழந்தை மற்றும் மகளிர் நல மேம்பாட்டு அமைச்சகத்தின் பணியைத் தொடர்ந்து, சில இந்திய மாநிலங்கள் பாலின சரிநிகர் வரவு-செலவுத் திட்டம் குறித்து ஆரம்ப முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றன.**

- "நாங்கள் மகளிர் மேம்பாட்டு திட்டங்களுக்கு என 10% சதவிகித ஒதுக்கீடு அளிக்கிறோம். எங்கள் உள்ளாட்சி திட்டங்களில் கணிசமான அளவிற்கு ஏற்கனவே செய்கிறோம்" என்று 2001-இல் **கேரள** முதல்வர் உரிமை கொண்டாடினார்.

- ☐ 2005-06ஆம் ஆண்டுக்கான **ராஜஸ்தான்** மாநில வரவு-செலவுத் திட்டம் ஆடவர், மகளிர் சரிநிகர் வரவு-செலவுத் திட்ட தணிக்கையின் தேவையை வற்புறுத்தியது. மேலும், தேர்ந்தெடுக்கப்பட்ட ஆறு துறைகளில் அத்தகைய வரவு-செலவுத் திட்டத் தணிக்கையை நடத்த உறுதியளித்தது.

- ☐ 2006ல் **கர்நாடக** துணை முதல்வர் கூறியதாவது : "மாநில அரசு ஆடவர், மகளிர் வரவு-செலவுத் திட்டக் குழு அமைப்பு ஒன்றை நிதித்துறையில், வரவு-செலவுத் திட்டத்தில் மகளிருக்கான ஒதுக்கீட்டை ஆராயவும் ஒதுக்கீட்டை அதிகப்படுத்தும் முயற்சிகளை பரிந்துரை செய்யவும் என நிறுவ உள்ளது".

- ☐ 2007-08ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் **மத்திய பிரதேச** அரசு 13 துறைகளில் ஆடவர், மகளிர் சரிநிகர் வரவு-செலவு திட்டமிடுதலை உள்ளடக்கியுள்ளது.

- ☐ நிதித் துறையையும் கையில் வைத்திருக்கும் **அசாம்** மாநில முதல்வர் 2008-09க்கான மாநில வரவு-செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்தார். அப்போது நடக்கும் நிதி ஆண்டிலிருந்து ஆடவர், மகளிர் சரிநிகர் வரவு-செலவுத் திட்டம் அறிமுகம் செய்யப்படுகிறது என்று அறிவித்தார்.

- ☐ **பீகார்** மாநில அரசு சட்டப்பேரவையில் ஆடவர், மகளிர் அடிப்படையில் கரிசன உணர்வுடன் 2008-09க்கான வரவு செலவுத் திட்டத்தை அளித்தது. அதில் மகளிரின் சமூகப் பொருளாதார மேம்பாடு சிறப்பாகக் குறிக்கப்பட்டது.

- ☐ **அரியானா** நிதி அமைச்சர் அரியானா மாநிலத்தில் 2008-09வது ஆண்டிலிருந்து ஆடவர், மகளிர் சரிநிகர் வரவு-செலவுத் திட்டம் இருக்கும் எனத் தெரிவித்தார்.

இடைக்கால அறிக்கை என்பது பத்து மாநிலங்களின் (அஸ்ஸாம், பீஹார், மேகாலயா, குஜராத், ஜம்மு மற்றும் காஷ்மீர், மஹாராஷ்ட்ரா, இராஜஸ்தான், மத்திய பிரதேசம், ஒரிஸ்ஸா மற்றும் மணிப்பூர்) 2000-01 மற்றும் 2001-02 நிதியாண்டுகளுக்குத் தொடர்பான தகவல் ஆய்வு முடிவுகளை மட்டுமே உள்ளடக்கியுள்ளது. **(22 மாநிலங்களில் தமிழ்நாடு சேர்க்கப்பட்டிருந்தாலும், அது மாநில அறிக்கையைச் சமர்ப்பிக்காததால், இடைக்கால அறிக்கையில் அதன் பெயர் இல்லை).**

பல்வேறு குறைபாடுகளை இந்த அறிக்கை பெற்றிருப்பதாக இதை எழுதியவர்கள் ஒத்துக் கொண்டிருப்பினும், அறிக்கையின் முடிவு :

> **"தேர்ந்தெடுக்கப்பட்ட 10 மாநிலங்களிலும், மகளிர் (இலக்கு மற்றும் சார்பு) திட்ட ஒதுக்கீடு மாநில வரவு செலவுத் திட்டத்தில் 3% - 10% வரையே உள்ளது. மகளிரைச் சார்ந்த திட்டங்களைக் காட்டிலும், அவர்களை இலக்காகக் கொண்ட திட்டங்கள் குறைந்த அளவு ஒதுக்கீட்டையே பெற்றுள்ளன. 4 மாநிலங்களில் 1%ஐ விடக் குறைவாகவே உள்ளது. மாநிலங்களுக்கு இடையே, மகளிர் சார்ந்த திட்டத்திற்கான ஒதுக்கீடு 1%ஐ விடக் குறைவானதிலிருந்து 11% சதவிகிதம் முடிய என வேறுபட்டிருந்தது. வெளிப்படையான உண்மை என்னவென்றால், எல்லா மாநிலங்களிலும் ஒவ்வொரு ஆண்டும் மகளிர் திட்ட நிதி விரும்புகின்ற அளவை விட மிகக் குறைவாகவே தரப்படுகிறது. மேலும் அது திட்டக்குழுவின் 30% என்கிற அளவீட்டு விதிமுறைகளில் இருந்தும் குறைவாகத்தான் உள்ளது".**
>
> **- NIPCCD ஆய்வு, 2002**

ஆடவர், மகளிர் சரிநிகர் மாநில வரவு-செலவுத் திட்ட ஆய்வு தொடர்பான முயற்சிகளைத் தீவிரப்படுத்துவதில் சிக்கல்கள் உண்டு. இதில் அடிப்படை ஆய்வு செயல்வழிமுறைகளைப், புதிதாகக் கற்றுக்கொள்வதில் பெண்களுக்கான NIPCCD அமைப்பின் முன்னோடி முயற்சி முக்கியக் கருவியாக உள்ளது. நிதி ஒதுக்கீட்டிற்காக மாறுபட்ட வகைகளின் தேவையை வெளிப்படுத்தவும், வரவு செலவுத் திட்ட இடைவெளிகளை தெரியப்படுத்தவும் இந்த முயற்சி பயனுள்ளதாக உள்ளது.

## சிறப்புக் கூறுத்திட்டம் - முக்கிய கூறுகள்

**1. விகிதாச்சாரம் : (Proportionality)**

சிறப்புக்கூறு திட்டத்தின்படி, மத்திய மாநில அளவில், மொத்த ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டில், குறிப்பிட்ட பிரிவினருக்கான நலத்திற்கு ஒதுக்கப்பட்ட, நிதி, குறையாமல் மொத்த மக்கள் தொகையில் அவர்தம் விகிதத்தை ஒத்துஇருத்தல் வேண்டும். அதாவது, மொத்த மக்கள் தொகையில் பெண்கள் 50% உள்ளனர், மத்திய மாநில வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடுகளில் குறைந்தபட்சம் 50% மகளிர் சிறப்புக்கூறு திட்டத்திற்கு ஒதுக்கப்பட வேண்டும்.

**2. இணைந்து ஒருமுகப்படுதல் : (Convergence)**

பல்வேறு துறைகள் மற்றும் அமைச்சகங்களின் எண்ணற்ற சலுகைகள் பெண்கள் மேம்பாட்டில் எந்தவொரு ஆக்கப்பூர்வமான தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. சம்பந்தப்பட்ட பிரிவினரின் முன்னுரிமை தேவைகளுக்கும் குறிப்பிட்ட வரலாற்றுத் தேவைகளுக்கு ஏற்ப, அனைத்து திட்டங்களும் உருவாக்கப்பட வேண்டும் மற்றும் போதுமான நிதி ஒதுக்கீடும் செய்யப்படவேண்டும் என சிறப்புக்கூறுத் திட்டம் எதிர்நோக்குகிறது. சிறப்புக்கூறுத் திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள் மாவட்ட வாரியாக, துறை வாரியாக பணி வாரியாக பிரித்துக்காட்டப் படவேண்டும்.

**3. அனைத்திலும் பயன்படுத்தப்படுதல் : (Universality)**

சிறப்புக்கூறுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக எந்தவொரு மத்திய மாநிலத் துறையோ அமைச்சகமோ விலக்கு கோர இயலாது. திட்டங்களைப் பிரிக்க முடியாது என்னும் ஏற்றுக் கொள்ள முடியாத கூற்றின் அடிப்படையில் போலியான நிதி ஒதுக்கீடுகளை அனுமதிக்க முடியாது என்பதை சிறப்புக்கூறுத் திட்டம் தெளிவாகக் குறிப்பிடுகிறது. குறிப்பிட்ட அரசாணைகளின் படி, சிறப்புக்கூறு திட்டத்தின் கீழ் ஒழுங்காக திட்டங்களை உருவாக்க ஒவ்வொரு துறையும் அமைச்சகமும் சீரிய முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். சிறப்புக்கூறு திட்டத்தின் கீழ் வரும் அனைத்து வரவு-செலவுகளுக்கும் "திட்டம் - வரவு-செலவுத் திட்ட இணைப்பு" நூலில் தனித்தனியாக வரவு செலவுத் திட்ட தலைப்புகளின் கீழ் காட்டப்படவேண்டும். இவ்வணுகுமுறையே ஒதுக்கப்பட்ட நிதி, குறைவான அளவிலே செலவழிக்கப்படுவதையும் தவறுதலாகப் பயன்படுத்தப்படுவதையும் தவிர்க்க உறுதி செய்யும்.

**4. தனித்துவத்தோடு தாமே முடிவு எடுத்தல் : (Auto decision making)**

(பெண்களுக்கான கூறு திட்டம்) மகளிரின் சொல்லே இறுதிச் சொல்லாக, சிறப்புக் கூறு திட்டத்தின் அமலாக்கத்தில் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கிறது. சிறப்புக் கூறு திட்டத்தின் வடிவு ஆக்கம், அமலாக்கம், மற்றும் கண்காணிப்பிற்கான முகவர் அமைப்பாக, மத்திய மாநில அளவில், மகளிர் நலம் சம்பந்தப்பட்ட துறைகள் (மகளிர் மற்றும் குழந்தை நலத் துறை) செயல்பட வேண்டும் என சிறப்புக் கூறு திட்டம் வற்புறுத்துகிறது.

## பெண்களுக்கான சிறப்புத் திட்டம் - முன் வந்த மாதிரிப் படிவத்தின் ஓர் உருமாற்றமா?

6வது ஐந்தாண்டுத் திட்டத்தில் தலித் மக்களுக்காக உருவாக்கப்பட்ட சிறப்புக்கூறு திட்டத்தையும் அதற்கு முன்னோடியான பழங்குடியினருக்கானத் துணை திட்டத்தையும் அடிப்படையில் உள் ஊக்கமாகக் கொண்டுள்ளதுதான். "பெண்களுக்கான கூறு திட்டம்". தலித் மக்களின் நலனுக்கான எல்லா திட்ட உத்திகளும் தோல்வி அடைந்ததை ஒப்புக்கொண்ட அடிப்படையிலே தலித் மக்களுக்கான சிறப்புக்கூறுத் திட்டம் உருவாக்கப்பட்டது. தலித் மக்களுக்கான சிறப்புக்கூறுத் திட்டம் தலித் மக்களுக்கான திட்டமிடுதலிலும், வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீட்டிலும், ஒரு மாதிரிப் படிவ மாற்றத்தை ஏற்படுத்தியது. அது தெளிவான கொள்கைகளையும் செய்முறைகளையும் உடையது (பார்க்க பெட்டிச் செய்தி).

தலித் மக்களின் வரவு செலவு திட்ட ஒதுக்கீட்டில் ஈடுபடும் "சமூக கண்காணிப்பகம் - தமிழ்நாடு" மற்றும் நாட்டிலுள்ள, வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு குறித்து பரிந்துரைத்து வாதாடும் அமைப்புகளின் நெடிய அனுபவங்கள் சிறப்புக்கூறுத் திட்டத்தின் வல்லமையைப் பற்றிய உள் நுணுக்கங்களை நமக்கு வழங்குகின்றன. ஆட்சியாளரின் ஆர்வமின்மையும் அரசியல் மனம் இல்லாமையும் சேர்ந்து இந்த வளர்ச்சிகர திட்டத்தைத் தொடர்ந்து செயலிழக்கச் செய்து தலித் மக்களின் வளர்ச்சியைப் பெரிதும் பாதித்துத் தடுப்பதைப் பற்றிய உள் நுணுக்கங்களையும் நமக்கு அளிக்கின்றன.

**தலித் மக்களுக்கான சிறப்புக்கூறுத் திட்டத்தின் அமலாக்கத்தில் கண்டறியப்பட்ட அதே பாடுகளைப் போலவே பெண்களுக்கான கூறு திட்டமும் பாதிக்கப்படக்கூடாது என்பதை உறுதி செய்ய சீரிய மற்றும் தனி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன என்பது மிகவும் முக்கியமானதாகும்.**

ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டத்தில் (1997-2002) தான் முதன் முதலில் பெண்களுக்கான கூறுத் திட்டம் சேர்க்கப்பட்டது. ஆடவர் மகளிர் சரிநிகர் வரவு-செலவு திட்டமிடுதல் மற்றும் பெண்களுக்கு அதிகாரமளித்தலுக்கான ஒரு பெரிய உத்தியாகக் கருதப்பட்டது. முக்கியமாக பெண்கள் தொடர்பான துறைகளில், "நடைமுறையில் இருக்கும் பணிகளை ஒருங்கிணைக்கவே", பெண்களுக்கான சிறப்புக்கூறுத் திட்டம் உருவாக்கப்பட்டது.

**"குறைந்தபட்சம் 30 சதவிகித நிதிகளும் / பயன்களும் பெண்கள் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு"** நிதி ஒதுக்கப்படுவதை உறுதி செய்ய மத்திய மாநில அரசுகளை இத்திட்டம் வழிநடத்துகிறது. பெண்களுக்கு அதிகாரமளிப்பது குறித்து முழுமையான அணுகுமுறையை முன்வைக்கும் உத்தியாக உருவாகிறதை உறுதி செய்யும் ஆற்றல் மிக்க முறையின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி மற்றும் பயன்கள் தொடர்ந்து கிடைக்கும் நடைமுறையைச் சிறப்பாகக் கண்காணிக்கவும் வழி சொல்கிறது.

| தலித் மக்களுக்கான சிறப்புக் கூறுத் திட்டம் | பெண்களுக்கான கூறுத் திட்டம் |
|---|---|
| **1. விகிதாச்சாரம் :**<br>மொத்த திட்ட ஒதுக்கீடு நிதியிலிருந்து தலித் மக்களின் மேம்பாட்டுக்காக ஒதுக்கப்படும் நிதி குறிப்பிட்ட மாநிலத்தின் மக்கள் தொகையிலே, தலித் மக்களின் விகிதத்திற்கு குறையாமல் இருக்க வேண்டும். எனவே, தமிழக மொத்த மக்கள் தொகையிலே தலித் மக்களின் எண்ணிக்கை 19% சதவீதம் என்பதற்கிணங்க, தமிழகத்தின் மொத்த திட்ட நிதியிலே, ஐந்தில் ஒரு பங்கு சிறப்புக் கூறுத் திட்ட நிதியாக ஒதுக்கப்படவேண்டும். | குறைந்த பட்சம் 30% நிதியும் பயன்களும் பெண்கள் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு ஒதுக்கப்படுவதை மத்திய மாநில அரசுகள் உறுதி செய்ய வேண்டும். நிதி அடிப்படையில் பெரும்பாலான இடங்களில் பெண்களுக்கு 50% ஒதுக்கப்பட வேண்டும். |
| **2. இணைந்து ஒருமுகப்படுதல் :**<br>குறிப்பிட்ட அரசாணைகள் மூலம் அறிவிக்கப்படும் தலித் மக்களின் மேம்பாட்டை, உத்திரவாதப்படுத்தும் திட்டங்களும் மற்றும் அவற்றிற்கான நிதி ஒதுக்கீடுகள் மட்டுமே சிறப்புக்கூறுத் திட்டத்தின் கீழ் இடம்பெற வேண்டும். **சிறப்புக்கூறு திட்டத்தின் கீழ் வரும் அனைத்து வரவு-செலவுகளும் "திட்டம் - வரவு-செலவுத் திட்ட இணைப்பு நூலில்" தனித்தனியாக வரவு-செலவுத் திட்ட தலைப்புகளின் கீழ்காட்டப்படவேண்டும்.** இவ்வணுகுமுறையே தலித்துகளுக்கான நிதி, வேறு வழியில் எடுக்கப்படுவதையும் குறைவான அளவிலே செலவழிக்கப்படுவதையும், தவறுதலாகப் பயன்படுத்துவதையும் தவிர்க்க உதவும், அதிகாரமளித்தலுக்கான முழுமையான திட்டத்தைத் தயாரித்து மாவட்ட வாரியாக மற்றும் பணிகள் / துறைகள் வாரியாகவும் பிரித்து தயாரித்துச் செயல்படுத்தக் கோருகிறது. | ஒரு சில ஒருங்கிணைப்புச் செயல்பாடுகள் தவிர, கருத்தில் கொள்ளக்கூடிய அளவில், பெண்களுக்கான கூறு திட்டத்தைப் பொறுத்தவரையில் தெளிவான பார்வை எதுவும் இல்லை எனத் தோன்றுகிறது. |
| **3. அனைத்திலும் பயன்படுத்தப்படுதல் :**<br>சிறப்புக்கூறுத் திட்டத்தின் கீழ் மாநில அரசின் ஒவ்வொருத் துறையும், அமைச்சகமும் தலித் மக்களின் குறிப்பிட்ட தேவைகள் / முன்னுரிமைகளின் அடிப்படையில் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்த தனி முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். சிறப்புக்கூறுத் திட்டத்தின் கீழ் போலியான ஒதுக்கீடுகள் தவிர்க்கப்பட வேண்டும். தலித் மக்களின் மேம்பாட்டிற்காக ஒதுக்கீடுகளை அனைத்து திட்டங்களிலும் இணைக்க வேண்டும். மேலும் பிரிக்க முடியாத மற்றும் பிரிக்கக்கூடிய பணி என்று சொல்லப்படுவதை இங்கே கொண்டு வரக்கூடாது. | பரம்பரையாக பெண்கள் தொடர்பான துறைகளுக்கும் அமைச்சகங்களுக்கும் மட்டும் பெண்களுக்கான சிறப்புக்கூறு திட்டம் வரையறுக்கப்படுவதாய்த் தோன்றுகிறது. |
| **4. தனித்துவத்தோடு தாமே முடிவு எடுத்தல் :**<br>மத்திய மாநில அரசுகளில் தலித் மக்களின் நலனுக்கான 20 துறை முகவர் அமைப்பாகி தலித் சிறப்புக்கூறு திட்டத்தை உருவாக்கி, அமலாக்கி, அதைக் கண்காணிக்க வேண்டும். தமிழ்நாட்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சிறப்புக்கூறுத் திட்டத்திற்கான முகவர் அமைப்பாகும். | மகளிர் மற்றும் குழந்தைகள் நல அமைச்சகம், ஆடவர் மகளிர் சரிநிகர் வரவு-செலவுத் திட்டமிடுதலில் மத்திய அளவில் முக்கிய பங்கு வகித்தாலும், முகவர் அமைப்பிற்கான அதிகாரம் அதற்கு இருக்கிறதா என்பது தெளிவாக இல்லை. மகளிர் நலனுக்கென தமிழ்நாட்டில் தனியாகத் துறையேதும் இல்லை. |

பெண்களுக்கான சிறப்புக்கூறு திட்டத்தைப் பற்றிய தீவிரமான ஆய்வுபகரும் உண்மை - இதன் இலக்கு ஆரம்பத்திலேயே நீர்த்துவிட்டது, திட்டத்தின் முக்கிய குறைகளை வெளிப்படுத்துகிறது. தலித் சிறப்புக்கூறு திட்டத்தையும் பெண்கள் கூறு திட்டத்தையும் அவற்றின் அடிப்படை அம்சங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால், சிறப்புக்கூறு திட்டத்தின் வடிவமே பெண்கள் கூறு திட்டத்தில் பெருமளவில் குறைந்துவிட்டதை அறியலாம். (பார்க்க: எதிர்ப்பக்கத்தில் உள்ள பெட்டிச் செய்தி).

**தலித் மக்களுக்கான சிறப்புக்கூறுத் திட்டத்திற்குத் தேவைப்பட்ட கண்ணோட்டத்தின் மாபெரும் மாற்றத்திற்கு காரணமாக இருந்த விகிதாச்சாரம், இணைந்து ஒருமுகப்படுதல், அனைத்திலும் பயன்படுத்தப்படுதல்; மற்றும் தனித்துவத்தோடு தாமே முடிவெடுத்தல் ஆகிய கொள்கைகள், பெண்களுக்கான கூறுத் திட்டத்தில் இல்லை அல்லது பெருமளவில் குறைக்கப்பட்டுவிட்டன. இதனால், ஆடவர் மகளிர் சரிநிகர் வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் மகளிருக்கு உண்மையான அதிகாரம் அளிக்கப்படுவது மறுக்கப்படுகிறது.**

பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், இந்த குறை ஓரளவு கணக்கில் கொள்ளப்பட்டதாக அணுகுமுறை அறிக்கை தெரியப்படுத்துகிறது. (பார்க்க: பக். 21)

இருப்பினும் கீழ்க்காணும் இரண்டு அறிக்கைகளினால், ஆடவர் மகளிர் சரிநிகர் வரவு-செலவுத் திட்டமிடுதலில் இந்தியா நெடுந்தூரம் பயணிக்க வேண்டும் எனத் தெரிய வருகிறது.

> "அந்தந்த துறைக்கான வரவு-செலவுத் திட்டத்தில் பெண்களுக்கான சிறப்புக்கூறுத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட சரியான நிதியை ஆய்வுக்குட்பட்ட அனைத்துத் துறைகளுக்கும் (சில துறைகள் தவிர) வழங்க இயலவில்லை என ஆராய்ச்சியாளர்களின் ஆய்வறிக்கைகளும், பெறப்பட்ட தகவலின் இடைவெளிகளும் சுட்டிக்காட்டுகின்றன. பார்க்கப்பட்ட கணக்குகளோடு ஒதுக்கீடுகளுக்கான கணக்கு / தணிக்கை மற்றும் பதிவேடு முறைகளும் இவற்றிடம் இல்லை. தேவைகளுக்கு ஏற்ப திடீரென்று தற்காலிகமாக இந்த கணக்குகள் தயார் செய்யப்படுவதாகவும் தெரிவிக்கிறது".
>
> - என்.ஐ.பீ.சி.சி.டி. ஆய்வு, 2002

> "ஏறத்தாழ அனைத்துத் துறைகளிலும், இந்தியாவில் இதுவரை இருந்து வரும் பெண்களின் நிலவரத்தை 2007-2008ஆம் ஆண்டின் நிதியறிக்கை கட்டிக்காக்கிறது. ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்து போலவும் அனைத்து அமைச்சகங்களிலும் பெண்களுக்கான கூறு திட்டத்தில் உறுதி செய்ப்பட்டது போலவும் 30% ஒதுக்கீடு செய்வதை கருத்ததில் கொண்டு, அனைத்து மேம்பாட்டு திட்டங்களிலும் சலுகைகளிலும் பெண்களை முதன்மைப்படுத்த இன்னும் எவ்வளவு செய்ய வேண்டும் என்பதை பிரதிபலிக்கிறது'..
>
> - வரவு செலவு திட்டம் மற்றும் ஆளுமை பொறுப்பிற்கான மையம் (சி.பி.ஜி.ஏ.) "2007-08 நிதிநிலையறிக்கை : கனவா கானல் நீரா? மத்திய நிதி நிலையறிக்கை 2007-08க்கு பதில் அறிக்கை".

# பாகம் III
## தமிழகத்தில் ஆடவர் மகளிர் சரிநிகர் வரவு-செலவு திட்டமிடுதல்

6. ஆய்வு முடிவுகள்

7. பரிந்துரைகள்

**தமிழகத்தில் ஆடவர், மகளிர் சரிநிகர் வரவு-செலவு திட்டமிடுதல் நோக்கி - ஆய்வு முடிவுகள் :**

**மத்திய திட்டக் குழுவும் மத்திய அரசும் (1998-2008 என) பத்து ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து தகவல்தொடர்பு / பணி வழிகாட்டுதல் நெறிமுறைகளை அனுப்பிக் கொண்டிருந்த போதிலும், தமிழக அரசு வரவு-செலவு திட்ட ஆவணங்களில், இது நாள் வரை, "ஆடவர் மகளிர் சரிநிகர் வரவு-செலவுத் திட்டமிடல்" என்றோ, "பெண்களுக்கான கூறுத் திட்டம்" என்றோ பேச்சே இல்லை.**

மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான 18 அம்ச திட்டத்தின் கொள்கைத் திட்டத்தை முந்தைய அ.இ.அ.தி.மு.க. அரசு கொண்டு வந்தது. கட்சி அரசியலுக்கு இரையாகி, இதன் அமலாக்கம் நிறைவேறாமல் நிற்கிறது!

சமூக மேம்பாட்டிற்கான தமிழ்நாடு மக்கள் அமைப்பு, அனைத்திந்திய ஜனநாயக மகளிர் கூட்டமைப்பு, தமிழ்நாடு மகளிர் பஞ்சாயத்து தலைவிகள் அமைப்பு மற்றும் சமூகக் கண்காணிப்பகம் - தமிழ்நாடு போன்ற அமைப்புகள் தொடர்ந்து மாநிலத்தில் ஆடவர் மகளிர் சரிநிகர் வரவு-செலவு திட்டமிடுதலுக்காக குரல் கொடுத்து வந்தாலும், மாநில நிதிநிலை அறிக்கைகள் ஆடவர் மகளிர் சரிநிகர் அடிப்படையை மறந்த அறிக்கையாகவே இருக்கிறது. அத்தகைய சரிநிகர் வரவு-செலவுத் திட்டமிடுதல் குறித்த துவக்கத்திற்கான அறிகுறி கூட இல்லை!

ஆடவர், மகளிர் சரிநிகர் வரவு-செலவு திட்டமிடுதல் குறித்த சீரிய முயற்சிகளும், தமிழகத்தின் குறிப்பிட்ட நலிந்த மகளிர் பிரிவினரின் வேதனைக்குரிய நிலையை மாற்றி, மகளிர் மேம்பாட்டிற்கான முழுமையான கொள்கையை அமைத்தலும் இன்றைய முக்கிய தேவைகளாகும்.

மாநில அரசுகளின் ஆடவர் மகளிர் பற்றிய பார்வையை முன்னிலைப்படுத்துதலிலும், அதே அடிப்படையிலான வரவு-செலவு திட்டமிடுதல் குறித்து அரசு உத்தியை விவரிக்கவும் விவாதிக்கவும் சேர்ந்து மூன்று வட்டார பயிலரங்கங்களை மகளிர் மற்றும் குழந்தை மேம்பாட்டு அமைச்சகம் ஏற்பாடு செய்தது. புதுதில்லி, புனே மற்றும் கொல்கத்தாவில் நடந்த மூன்று பயிலரங்கங்களில், பொது நிதி, திட்டமிடுதல் மற்றும் மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறைகளின் பிரதிநிதிகள் / மாநில செயலாளர்கள் பங்கேற்றனர்.

2005 டிசம்பர் 15 அன்று, 'யாஷ்தா' எனும், புனேயில் மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் தெற்கு மற்றும் மத்திய மாநிலங்களுக்காக ஏற்பாடு செய்த வட்டார பயிலரங்கத்தில், தமிழக அரசு பிரதிநிதிகள், ஆடவர் மகளிர் சரிநிகர் வரவு-செலவு திட்டமிடுதல் குறித்த மாநில செயல்திட்டத்தை சமர்ப்பித்தனர்.

| **மாநிலம்: தமிழ்நாடு** | | |
|---|---|---|
| ஆடவர் மகளிர் சரிநிகர் வரவு-செலவு திட்டமிடுதலின் தற்போதைய நிலை | அதே கண்ணோட்டத்தில் முக்கியமான துறைகள் | தேவைப்படும் உதவி |
| ● கொள்கை அளவில் ஆடவர் மகளிர் சமத்துவத்துக்கான பொறுப்பு.<br><br>● மகளிருக்கான பணி ஒதுக்கீட்டிற்கான செயலாக்க வழியில், சுய உதவி குழுக்களின் வலிமையான இயக்கம் | ● பங்கெடுத்தல் மூலம் வரவு செலவுத் திட்டத்தை வலிமைப்படுத்துதல் மற்றும் முடிவெடுத்தலில் பெண்கள் தம் திறன்களை வளர்த்தல்.<br>● நடைமுறையில் இருக்கும் மனித வளர்ச்சி மையங்களில் ஆடவர் மகளிர் பற்றிய கரிசனங்கள் கொள்ளுதல்.<br>● வரவு செலவுத் திட்டத்தில் ஆடவர் மகளிர் அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய நுண் உணர்வு தேவை, | ● தலைமைச் செயலாளருக்கு ஆடவர் மகளிர் அடிப்படையில் ஒரு தனி மையம் அமைக்க மகளிர் குழந்தை நல மேம்பாட்டு அமைச்சகம் கடிதம் எழுதுதல் வேண்டும். |

திட்டக்குழு மற்றும் அனைத்து மாநில தலைமை செயலாளர்களுக்கும் பயிலரங்கத்தின் முடிவு தெரிவிக்கப்பட்டன.

குழந்தை மேம்பாடு மற்றும் பொது ஒத்துழைப்பிற்கான தேசிய அமைப்பின் செயல்முறை மற்றும் பெண்களுக்கான சிறப்புக்கூறு திட்டத்தின் அடிப்படையில், தமிழக நிதிநிலை அறிக்கைகளைப் படித்து, அதன் அடிப்படையில் ஆரம்ப கட்ட ஆய்வுகளை 'சமூகக் கண்காணிப்பகம் - தமிழ்நாடு' மேற்கொண்டது. செய்முறை கருவிகளையும் ஆய்வு முறைகளையும் சீர்படுத்தும் நிலையில், மாநிலத்தில் வரவு செலவு திட்டமிடுதலில் பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதியின் அளவை முடிவுகள் தெரிவிக்கின்றன.

## பயன்படுத்தப்பட்ட ஆய்வு முறைகள்

**குழந்தைகள் மேம்பாடு மற்றும் பொது ஒத்துழைப்பிற்கான தேசிய அமைப்பின் (என்.ஐ.பீ.சி.சி.டி)** ஆய்வு முறை :

'**என்.ஐ.பீ.சி.சி.டி**' ஆய்வு முறை என்பது ஓர் எளிய ஆய்வுப்பணி. அதாவது,

- **மகளிரை நோக்கிய சலுகைத் திட்டங்கள்** (100% ஒதுக்கீடும், பெண்களுக்குக் கிடைக்கும் சலுகைத் திட்டங்களாகும்).

- **மகளிர்சார்பான (மறைமுகப் பலன் தரக்கூடிய) சலுகைத் திட்டங்கள்** (ஒதுக்கப்பட்டதில் குறைந்தபட்சம் 30% பெண்களுக்கானது அல்லது பெண்களுக்குக் கணிசமாகப் பயன் தருவது).

- **ஆடவர் மகளிர் என்றில்லாமல் பொதுவான சலுகைத் திட்டங்கள்** (முழுச் சமுதாயத்திற்கும் உரியது என்ற வகையில்).

ஆகிய சலுகைத் திட்டங்கள் மற்றும் நடைமுறைத் திட்டங்கள் அனைத்தையும் பற்றிய தேவையான விபரங்களை மாநில வரவு செலவுத் திட்ட ஆவணங்களிலிருந்து சேகரித்துப் பரிசீலிப்பது.

**பெண்கள் (சிறப்பு) கூறு திட்டம் :**

பெண்கள் (சிறப்பு) கூறு திட்டம், மத்திய, மாநில அரசுகளை **'மகளிர் சம்பந்தப்பட்ட எல்லாத் துறைகளிலும் 30%க்குக் குறையாத நிதி அல்லது பயன்களைக் குறிப்பதில் உத்தரவாதம் செய்யும்படி பணிக்கிறது'.**

## தமிழ்நாட்டில் "மகளிர் திட்டங்கள்" மீது மொத்தச் செலவினப் பார்வை

**1997-98 முதல் 2004-05 முடிய (கணக்குகள்)**

ரூ. கோடியில்...

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| ஆண்டு (கணக்குகள்) | திட்ட ஒதுக்கீடு | பெண்களுக்கான சிறப்புக் கூறு திட்டத்தின்படி (பெண்களின் பங்கு 30%) | ஆண்டுத் திட்ட இணைப்பு புத்தகத்தில் உள்ள செலவினம் | % பங்கு (அணிவரிசை 2ல் அணிவரிசை 4ல் இணைத்த கணக்கு) | மறுக்கப்பட்ட தொகை (அணிவரிசை 3 - அணிவரிசை 4) (ஓர் ஒப்பீடு) |
| 1997 - 1998 | 4052.60 | 1215.78 | 127.37 | **3.14** | 1088.41 |
| **1998 - 1999** | 4500.09 | 1350.03 | 141.09 | **3.13** | 1208.94 |
| **1999 - 2000** | 5413.75 | 1624.12 | 145.18 | **2.68** | 1478.94 |
| **2000 - 2001** | 5807.26 | 1742.18 | 144.02 | **2.43** | 1598.16 |
| **2001 - 2002** | 5318.90 | 1595.68 | 155.84 | **2.93** | 1439.84 |
| **2002 - 2003** | 5841.05 | 1752.32 | 240.16 | **4.11** | 1512.16 |
| **2003 - 2004** | 7088.30 | 2126.49 | 242.34 | **3.42** | 1884.15 |
| **2004 - 2005** | 8285.84 | 2485.75 | 287.47 | **3.47** | 2198.28 |
| **(கடந்த 8 ஆண்டுகளில்), பெண்களுக்கு மறுக்கப்பட்ட மொத்த தொகை 1997-98இல் இருந்து 2004-05 வரையில் உள்ள குறிப்பிட்ட காலம்** | | | | | **12408.88** |

மூலம் : ஆண்டுத்திட்டம் : வரவு-செலவுத்திட்ட இணைப்பு நூல்கள், தமிழக அரசு (1999-2000இல் இருந்து 2006-07வரை)

குறிப்பு :

1. மகளிர் திட்டங்கள் = (பெண்களை இலக்காகக் கொண்ட திட்டங்களும்) + (பெண்களுக்கு ஆதரவான திட்டங்களும் ஆகும்.)
2. மாநில ஆண்டுத் திட்ட நிதி அளவுகள் மட்டுமே கணக்கில் எடுத்தாளப்படுகின்றன.

## 1997-98 முதல் 2004-05 முடிய கணக்குகள் :

**குழந்தைகள் மேம்பாடு மற்றும் பொது ஒத்துழைப்பிற்கான தேசிய அமைப்பின் செய்முறையைப் பயன்படுத்தியும்,** செய்யவேண்டிய பெண்களுக்கான கூறு திட்டத்தையும் இணைத்துப் பார்த்தால், கடந்த சில ஆண்டுகளில் (1997-98 முதல் 2004-05 முடிய), பொதுவாக மகளிருக்குத் தரப்பட்ட நிதியின் அளவு வெளிப்படுகிறது. அப்பட்டமாக, மகளிருக்கு உரியதும் அவர்களுக்கு ஒதுக்கப்பட வேண்டியதும் ஆன கோடிக்கணக்கான ரூபாய் மறுக்கப்பட்டு உள்ளது. (பார்க்க அட்டவணை, பக். 34).

- **பெண்களுக்கான சிறப்புக்கூறு திட்டத்தில் வலியுறுத்தியத்தின் குறைந்தபட்சம் 30% ஒதுக்கீட்டில், 1997-98 முதல் 2004-05 வரை மாநில ஒட்டுமொத்த திட்ட ஒதுக்கீட்டில் உண்மையான ஒதுக்கீடு 5% கூட இல்லை.**

- **1997-98 முதல் 2004-05 வரை, பெண்களுக்கான நிதித்தொகை குறைந்தது 12,408.88 கோடி ரூபாய் அவர்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது.**

## தமிழகத்தில் திட்ட ஒதுக்கீடும் பெண்களுக்கான கூறு திட்டமும் இணைந்த செயல்முறைகள் (துறைவாரியாக)

## 2005-06 (கணக்குகள்)

(ரூபாய் இலட்சத்தில்)

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| துறை | திட்ட ஒதுக்கீடு | பெண்களுக்கான சிறப்புக்கூறு திட்டத்தின்படி (30%) பெண்களுக்கு உரித்தான பங்கு | வரவு-செலவுத் திட்ட இணைப்பு புத்தகத்தின்படி பெண்களுக்கான செலவினம் | மாநில மொத்த திட்ட ஒதுக்கீட்டில் கிடைத்த அளவின்படி பெண்களின் % (தூண் 4 / தூண் 2)*100 |
| 1. வேளாண்மையும் அது தொடர்பான பணிகளும் | 49261.47 | 14778.44 | 4.93 | 0.1 % |
| 2. ஊரக வளர்ச்சி | 153223.88 | 45967.16 | 0.00 | 0 |
| 3. பாசனம், வெள்ளக் கட்டுப்பாடு | 27955.49 | 8386.65 | 0.00 | 0 |
| 4. மின்சக்தி | 100972.88 | 30291.86 | 0.00 | 0 |
| 5. தொழிலும் கனிமப் பொருட்களும் | 47969.93 | 14390.98 | 0.00 | 0 |
| 6. போக்குவரத்தும் சாலைகளும் | 187163.68 | 56149.10 | 0.00 | 0 |
| 7. அறிவியல், தொழில்நுட்பம் சுற்றுச்சூழல் | 317.59 | 95.28 | 0.00 | 0 |
| 8. பொதுவான பொருளாதாரப் பணிகள் | 12277.81 | 3683.34 | 0.00 | 0 |
| 9. கல்வி, விளையாட்டுப் போட்டிகள், கலைகள் | 53653.53 | 16096.06 | 16086.96 | 9.98% |
| 10. மக்கள் நல்வாழ்வு | 41802.91 | 12540.87 | 7730.38 | 8.49% |
| 11. குடிநீர் வழங்கல், வீட்டு வசதி, நகர்ப்பகுதி வளர்ச்சி | 97548.30 | 29264.49 | 0.00 | 0 |
| 12. செய்தி - விளம்பரம் | 104.14 | 31.24 | 0.00 | 0 |
| 13. ஆதிதிராவிடர் பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் | 49238.12 | 14771.44 | 1580.40 | 3.21% |
| 14. தொழிலாளரும் தொழிலாளர் நலனும் | 6592.60 | 1977.78 | 49.73 | 0.75% |
| 15. சமூக நலன் மற்றும் சத்துணவு | 128088.03 | 38426.41 | 33331.74 | 6.02% |
| 16. ஏனைய சமூக சமுதாய நலப் பணிகள் | 3766.05 | 1129.82 | 0.00 | 0 |
| 17. பொதுவான பணிகள் | 7648.13 | 2294.44 | 0.00 | 0 |
| **பெரு மொத்தம்** | **967584.54** | **290275.36** | **58784.14** | **6.08%** |

ஆதாரம் : வரவு செலவுத் திட்ட இணைப்பு, ஆண்டுத் திட்டம் 2007-08, தமிழக அரசு.

## 2005-2006 கணக்குகள் - ஆய்வுத் தகவல் :

'குழந்தைகள் மேம்பாடு மற்றும் பொது கூட்டுறவுக்கான தேசிய அமைப்பின்' செய்முறையைப் பயன்படுத்தியும், பெண்களுக்கான சிறப்புக்கூறு திட்டத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தால், கீழ்காணும் 2005-06 தமிழக அரசு அட்டவணையில் உள்ளது போல, ஏறத்தாழ அனைத்து துறைகளிலும் மகளிர் மேம்பாட்டுக்கான ஒதுக்கீடு மிகவும் குறைவானதாகம் உள்ளது. ஏறத்தாழ அனைத்து துறைகளும் ஆடவர் மகளிர் குறித்த விழிப்பு மற்றும் செயல்வடிவம் பெறாமலே இருக்கின்றன (பார்க்க அட்டவணை, பக். 36)

- மொத்தம் இருக்கும் 17 துறைகளில், பெண்களுக்கான திட்டங்கள் 6 துறைகளில் மட்டும் தான் இருக்கின்றன. அந்த 6 துறைகளிலும் கூட, எந்த துறையும் 'பெண்களுக்கான சிறப்புக்கூறு திட்ட' விதிமுறைப்படி 30% நிதியை பெண்களுக்காக ஒதுக்கவில்லை.

- "வேளாண்மையும் அது தொடர்பான பணிகளும்" என்கிற மேம்பாட்டுத் துறையின் கீழ் (தொகுதி) திட்ட ஒதுக்கீட்டில், 0.1% மட்டும் தான் பெண்களுக்காக செலவினம் காட்டப்பட்டுள்ளது.

- "கல்வி, போட்டி, விளையாட்டுகள், கலைகள்" துறையின் கீழ் திட்ட ஒதுக்கீட்டில் 29.98% மட்டும் தான் பெண்களுக்காக செலவினமாக காட்டப்பட்டுள்ளது.

- மக்கள் நல்வாழ்வு துறையின் திட்ட ஒதுக்கீட்டில், 18.49% மட்டும் தான் பெண்களுக்காக செலவினமாகக் காட்டப்பட்டுள்ளது.

- ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலத்துறையின் திட்ட ஒதுக்கீட்டில், 3.21% மட்டும் தான் பெண்களுக்காக செலவினமாகக் காட்டப்பட்டுள்ளது

- தொழிலாளர் நலத் துறையின் திட்ட ஒதுக்கீட்டில், 0.75% மட்டும் தான் பெண்களுக்காக செலவினமாகக் காட்டப்பட்டுள்ளது.

- மொத்தம் இருக்கும் 17 துறைகளில் 11 துறைகள் ஆடவர் மகளிர் சரிநிகர் பார்வை இல்லாததால், பெண்களுக்கென எந்த ஒரு திட்டத்தையும் வடிவமைக்கவில்லை. அவை,

  1. ஊரகவளர்ச்சி
  2. பாசனம், வெள்ளக் கட்டுப்பாடு
  3. மின் சக்தி
  4. தொழிலும். கனிமப் பொருட்களும்
  5. போக்குவரத்தும். சாலைகளும்
  6. அறிவியல், தொழில் நுட்பவியல், சுற்றுச் சூழல்
  7. பொதுப் பொருளாதாரப் பணிகள்
  8. குடிநீர் வழங்கல், வீட்டுவசதி, நகரப்பகுதி வளர்ச்சி
  9. செய்தி - விளம்பரம்
  10. ஏனைய சமூக - சமுதாய நலப் பணிகள்
  11. பொதுவான பணிகள்

- 2005-06 கணக்குகள் படி, தமிழக அரசின் மொத்த திட்ட ஒதுக்கீடு 967584.54 லட்சம் ரூபாய், பெண்களுக்கான சிறப்புக்கூறுத் திட்டத்தின் படி (30%), பெண்களுக்கு உரித்தான பங்கு 290275.36 லட்சம் ரூபாய் ஆனால் இணைப்பு புத்தகத்தின் படி பெண்களுக்கான செலவினம் 58784.14 லட்சம் ரூபாய் மட்டும்.

- □தமிழக அரசின் 2005-06 கணக்கின் மொத்த திட்ட ஒதுக்கீட்டில், 6.08% மட்டும் பெண்களுக்காக செலவினமாகக் காட்டப்பட்டது.

- □2005-06 கணக்கில், பெண்களை இலக்காகக் கொண்ட சலுகைகளின் ஒதுக்கீடு, மாநில மொத்த வரவு செலவு திட்டத்தில், 3.60% மட்டும் தான்.

- □பெண்களை சார்ந்த சலுகைத் திட்டங்களுக்கான ஒதுக்கீடு, 2005-06 கணக்குகள் படி, மாநில மொத்த வரவு செலவு திட்டத்தில் 2.48% மட்டும் தான்.

**2005-06 கணக்குகளில், தமிழக அரசின் 48 வளர்ச்சி தலைப்புகளில், 6 வளர்ச்சி தலைப்புகளில் மட்டும் தான் பெண்களுக்காக திட்டங்கள் இருக்கின்றன.**
(பக்கம் 39-41 பார்க்க)

# பெண்களுக்கான சிறப்புக்கூறு திட்டமும் பெண்களுக்கான ஒதுக்கீடும் (2005-06 கணக்குகள்)

*(ரூபாய் இலட்சத்தில்)*

| வ. எண் | துறைகள் / வளர்ச்சித் தலைப்புகள் | திட்ட ஒதுக்கீடு | பெண்களுக்கான சிறப்புக்கூறு திட்டப்படி பெண்களுக்கு உரித்தான பங்கு (30%) | வரவு-செலவுத் திட்ட இணைப்பு நூல் காட்டும் நிதியளவு |
|---|---|---|---|---|
| | **வேளாண்மையும் அது தொடர்பான பணிகளும்** | **49261.47** | **14778.44** | **4.93** |
| 1 | பயிர் வளர்ப்பு | 8099.12 | 2429.74 | 4.93 |
| 2 | ஆராய்ச்சி - கல்வி | 6177.93 | 1853.38 | 0.00 |
| 3 | உணவுப் பொருள் சேமிப்பு மற்றும் கிடங்கு வசதி | 19.42 | 5.83 | 0.00 |
| 4 | மண் வள - நீர் வள பாதுகாப்பு | 6471.15 | 1941.35 | 0.00 |
| 5 | கால்நடை வளர்ப்பு | 1742.73 | 522.82 | 0.00 |
| 6 | பால் பண்ணை வளர்ச்சி | 59.49 | 17.85 | 0.00 |
| 7 | மீன் வளம் | 2423.66 | 727.10 | 0.00 |
| 8 | கானக வளம் | 13908.64 | 4172.59 | 0.00 |
| 9 | வேளாண்மை நிதி உதவி நிறுவனங்களில் முதலீடு | 0.00 | 0.00 | 0.00 |
| 10 | கூட்டுறவு | 13908.64 | 4172.59 | 0.00 |
| | **ஊரக வளர்ச்சி** | **153223.88** | **45967.16** | **0.00** |
| 11 | ஊரக வளர்ச்சி சிறப்புத் திட்டம் | 50998.38 | 15299.51 | 0.00 |
| 12 | நிலச்சீர்திருத்தங்கள் | 0.00 | 0.00 | 0.00 |
| 13 | சமுதாய வளர்ச்சி | 102225.50 | 30667.65 | 0.00 |
| | **பாசனம், வெள்ளக்கட்டுப்பாடு** | **27955.49** | **8386.65** | **0.00** |
| 14 | சிறுபாசனம் | 6277.23 | 1883.17 | 0.00 |
| 15 | பாசனப் பகுதி மேம்பாடு | 2021.25 | 606.38 | 0.00 |
| 16 | பெரும் பாசனமும் நடுத்தர பாசனமும், வெள்ளக்கட்டுப்பாடும் | 19657.01 | 5897.10 | 0.00 |

| வ. எண் | துறைகள் / வளர்ச்சித் தலைப்புகள் | திட்ட ஒதுக்கீடு | பெண்களுக்கான சிறப்புக்கூறு திட்டப்படி பெண்களுக்கு உரித்தான பங்கு (30%) | வரவு-செலவுத் திட்ட இணைப்பு நூல் காட்டும் நிதியளவு |
|---|---|---|---|---|
| **மின் சக்தி** | | **100972.88** | **30291.86** | **0.00** |
| 17 | மின் விசை மேம்பாடு | 100663.70 | 30199.11 | 0.00 |
| 18 | மரபு சாரா எரி சக்தி வாயில்கள் | 309.18 | 92.75 | 0.00 |
| **தொழிலும் கனிமப் பொருட்களும்** | | **47969.93** | **14390.98** | **0.00** |
| 19 | நடுத்தர பெருந்தொழில்கள் | 6738.40 | 2021.52 | 0.00 |
| 20 | கிராமத் தொழில்களும் சிறுதொழில்களும் | 41208.62 | 12362.59 | 0.00 |
| 21 | எடைகளும் அளவைகளும் | 0.00 | 0.00 | 0.00 |
| 22 | சுரங்கம் வெட்டுதல், உலோகவியல் தொழில்கள் | 22.91 | 6.87 | 0.00 |
| **போக்குவரத்தும் சாலைகளும்** | | **187163.68** | **56149.10** | **0.00** |
| 23 | துறைமுகங்கள், கலங்கரை விளக்கங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து | 100.00 | 30.00 | 0.00 |
| 24 | சாலைகளும், பாலங்களும் | 176716.99 | 53015.10 | 0.00 |
| 25 | சாலை போக்குவரத்து-உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து | 10346.69 | 3104.01 | 0.00 |
| **அறிவியல் தொழில் நுட்பவியல் சுற்றுச் சூழல்** | | **317.59** | **95.28** | **0.00** |
| 26 | அறிவியல் பணிகளும் ஆராய்ச்சியும் | 224.56 | 67.37 | 0.00 |
| 27 | உயிரின வாழ்க்கைச் சூழலும் சுற்றுச் சூழலும் | 93.03 | 27.91 | 0.00 |
| **பொதுப் பொருளாதாரப் பணிகள்** | | **12277.81** | **3683.34** | **0.00** |
| 28 | தலைமைச் செயலகம் - பொருளாதாரப் பணிகள் | 10326.49 | 3097.95 | 0.00 |
| 29 | சுற்றுலா | 1706.08 | 511.82 | 0.00 |
| 30 | பொருளாதார ஆலோசனையும் புள்ளி விவரங்களும் | 66.74 | 20.02 | 0.00 |
| 31 | நுகர் பொருள் வழங்கல் | 178.50 | 53.55 | 0.00 |
| **கல்வி, போட்டி விளையாட்டுகள், கலைகள்** | | **53653.53** | **16096.06** | **16086.96** |
| 32 | பொதுக் கல்வி | 46101.61 | 13830.48 | 16086.96 |
| 33 | தொழில் நுட்பக் கல்வி | 5325.98 | 1597.79 | 0.00 |
| 34 | கலையும் பண்பாடும் | 459.84 | 137.95 | 0.00 |
| 35 | போட்டி விளையாட்டுகளும் இளைஞர் நலப் பணிகள் | 1766.10 | 529.83 | 0.00 |

| வ. எண் | துறைகள் / வளர்ச்சித் தலைப்புகள் | திட்ட ஒதுக்கீடு | பெண்களுக்கான சிறப்புக்கூறு திட்டப்படி பெண்களுக்கு உரித்தான பங்கு (30%) | வரவு-செலவுத் திட்ட இணைப்பு நூல் காட்டும் நிதியளவு |
|---|---|---|---|---|
| **மக்கள் நல்வாழ்வு** | | **41802.91** | **12540.87** | **7730.38** |
| 36 | மருத்துவம் | 28350.78 | 8505.23 | 0.00 |
| 37 | பொதுச் சுகாதாரம் | 13452.13 | 4035.64 | 7730.38 |
| **குடிநீர் வழங்கல், வீட்டு வசதி, நகர் பகுதி வளர்ச்சி** | | **97548.30** | **29264.49** | **0.00** |
| 38 | குடிநீர் வழங்கலும் துப்புரவும் | 59320.58 | 17796.17 | 0.00 |
| 39 | வீட்டு வசதி | 5480.55 | 1644.17 | 0.00 |
| 40 | நகர்ப் பகுதி வளர்ச்சி | 32747.17 | 9824.15 | 0.00 |
| **செய்தி - விளம்பரம்** | | **104.14** | **31.24** | **0.00** |
| 41 | செய்தி விளம்பரம் | 104.14 | 31.24 | 0.00 |
| **ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்** | | **49238.12** | **14771.44** | **1580.40** |
| 42 | ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் | 49238.12 | 14771.44 | 1580.40 |
| **தொழிலாளரும், தொழிலாளர் நலனும்** | | **6592.60** | **1977.78** | **49.73** |
| 43 | தொழிலாளரும், தொழிலாளர் நலனும் | 6592.60 | 1977.78 | 49.73 |
| **சமூக நலன் மற்றும் சத்துணவு** | | **128088.03** | **38426.41** | **33331.74** |
| 44 | சமூக நலன் | 62664.92 | 18799.48 | 33331.74 |
| 45 | சத்துணவு | 65423.11 | 19626.93 | 0.00 |
| **ஏனைய சமூக - சமுதாய நலப் பணிகள்** | | **3766.05** | **1129.82** | **0.00** |
| 46 | ஏனைய சமூக - சமுதாய நலப் பணிகள் | 3766.05 | 1129.82 | 0.00 |
| **பொதுவானப் பணிகள்** | | **7648.13** | **2294.44** | **0.00** |
| 47 | எழுது பொருள் - அச்சுத்துறை | 99.57 | 29.87 | 0.00 |
| 48 | பொதுப் பணிகள் | 7548.56 | 2264.57 | 0.00 |
| | **பெரு மொத்தம்** | **967584.54** | **290275.36** | **58784.14** |

***(மாநில ஆண்டு வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடுகள் மட்டுமே கணக்கில் எடுக்கப்பட்டுள்ளன)***
***ஆதாரம் : ஆண்டு திட்டம் - வரவு செலவுத் திட்ட இணைப்பு, 2007-08, தமிழக அரசு)***

## ஆய்வுத் தகவல் - 2006-07 (திருத்த மதிப்பீடு) மற்றும் 2007-08 (வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு)

2006-07 (திருத்த மதிப்பீடு) மற்றும் 2007-08 (வரவு செலவு திட்ட மதிப்பீட்டை) நாங்கள் மேலும் ஆராய்ந்ததில், முன்பு செய்த ஆய்வுகளின் கண்டுப்பிடிப்புகளை அவை உறுதி செய்கின்றன.

- தமிழகத்தில், 2006-07 திருத்த மதிப்பீட்டில் 6.40% பெண்களுக்கென ஒதுக்கப்பட்டது. 2007-08 வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் 6.70% மட்டுமே பெண்களுக்கென உள்ளது.
- பெண்களை இலக்காகக் கொண்ட திட்ட சலுகைகளின் நிதி ஒதுக்கீடு, மாநில மொத்த வரவு செலவு திட்டத்தில், 2006-07 (திருத்த மதிப்பீடு) - 4.17% எனவும் மற்றும் 2007-08 (வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் 4.97% எனவும் காட்டப்பட்டு உள்ளது.
- பெண்கள் சார்ந்த திட்ட சலுகைகளுக்கான நிதி ஒதுக்கீடு, மாநில மொத்த வரவு செலவு திட்டத்தில் 2006-07 திருத்த மதிப்பீடு 2.23% மற்றும் 2007-08 வரவு செலவு திட்ட மதிப்பீடு - 1.74% ஆகவும் காட்டப்பட்டு உள்ளது.

**மத்திய அரசு மற்றும் மாநில அரசை தொடர்ந்து வற்புறுத்தியும், எந்தவொரு பலனுமில்லாது தொங்கல் நிலை நீடிப்பது...**

**தமிழக அரசின் நிதிநிலை அறிக்கை ஆவணங்களும் ஆடவர் மகளிர் சரிநிகர் வரவு-செலவு திட்டமிடுதல் அல்லது பெண்களுக்கான சிறப்புக்கூறு திட்டம் பற்றியும் நிதியாண்டு 2008-09 வரை குறிப்பீடவே இல்லை!**

## பரிந்துரைகளும், கோரிக்கைகளும்

1. தமிழக அரசு, மாநில வரவு-செலவு திட்டங்களில் **ஆடவர் மகளிர் சரிநிகர் வரவு-செலவுத் திட்டத்தின் உட்கூறுகளை உள்ளடக்கிய பணி அறிக்கை** ஒன்றை உருவாக்கி, உடனடியாக அதே அடிப்படையில் வரவு செலவுத் திட்டச் செயல் வளர் முறையைத் தொடங்கி வைத்தல் பரிந்துரைக்கப்படுகிறது.

2. தேசிய அளவில் மற்றும் சில மாநிலங்களில் ஏற்கனவே உள்ளது போல், மாநில அளவில் ஒவ்வொரு அமைச்சகத்திலும் துறையிலும் மற்றும் திட்ட மற்றும் வரவு செலவுத் திட்டத் துறைகளிலும், **ஆடவர் மகளிர் பற்றிய சிறு அமைப்புகள்** (ஜென்டர் செல்) கொண்டு வரப்படவேண்டும். இவை பொறுப்பான பெண் அதிகாரிகளையும், பெண் சமூக வல்லுநர்களைக் கொண்டதாக இருக்க வேண்டும். இவை பல்வேறு அளவில், ஆடவர், மகளிர் சரிநிகர் வரவு செலவு திட்டமிடுதலின் உருவாக்கம் மற்றும் அமலாக்கத்தை திறம்படக் கண்காணிக்க வேண்டும்.

3. மாநிலத்தின் எல்லா வரவு செலவு திட்டமிடுதல் மற்றும் பொருளாதாரத் தளங்களில் **ஆடவர் மகளிர் அடிப்படையில் தனித்தனி தகவலைத்** தொகுக்க புள்ளியல் மற்றும் தகவல் சேகரிப்பிற்கான துறைகளுடன் சேர்ந்து மேற்சொல்லப்பட்ட சிறு அமைப்புகள் (ஜென்டர் செல்) செயலாற்ற வேண்டும்.

4. ஆடவர் மகளிர் சரிநிகர் வரவு-செலவுத் திட்டமிடுதல் மாநில அளவில் மட்டுமல்லாது **கிராமங்கள் மற்றும் பஞ்சாயத்து** அளவிலும் தொடங்கப்படவேண்டும்.

5. மாநிலத்தின் விளிம்பு நிலையில் உள்ள பிரிவுகளான **தலித், பழங்குடியினர், அமைப்புசாராத் தொழிலாளர்கள், உடல் ஊனமுற்றவர்களில்** பெண்களின் சிறப்புத் தேவைகளையும் உரிமைகளையும் ஆடவர் மகளிர் சரிநிகர் வரவு-செலவுத் திட்டமிடுதல் கருத்தில் கொள்ள வேண்டும்.

6. தமிழ்நாட்டில் ஆடவர் மகளிர் சரிநிகர் வரவு-செலவுத் திட்டமிடுதலைச் செயல்படுத்திட **மாநிலத்தில் உள்ள மகளிர் அமைப்புகளின் துணையோடு** சீரிய, முறையான விவாதங்களை தொடர்ந்து நடத்துவதைத் தமிழக அரசு உடனடியாகத் தொடங்கி வைக்கப் பரிந்துரை செய்யப்படுகிறது. மாநிலத்தில் மகளிருக்கான சிறப்புக்கூறு திட்ட வளர்ச்சியைக் கண்காணிக்கும் **ஆய்வு முறைக் கருவிகளைச் செழுமைப்படுத்திட** ஓர் அவசரத் தேவையும் இருக்கிறது.

* * *

# பாகம் IV

## பின் இணைப்புகள்

அ. ஆடவர் மகளிர் சரிநிகர் வரவு-செலவு திட்டத்திற்கு சி.பி.ஜி.ஏயின் சில பரிந்துரைகள்

ஆ. ஆடவர் மகளிர் தொடர்பான அருஞ்சொல் விளக்கத் தொகுதி

இ. துணை நின்ற நூல்கள்

## பின் இணைப்புகள் : அ

## ஆடவர் மகளிர் சரிநிகர் வரவு-செலவு திட்டத்திற்கு

## சி.பி.ஜி.ஏ.யின் பரிந்துரைகளில் சில துளிகள்

24.07.2006 அன்று சி.பி.ஜி.ஏ. புது தில்லி, (இதில் சமூகக் கண்காணிப்பகம் - தமிழ்நாடு நிறுவனம் ஓர் உறுப்பினர்) மனித வள மேம்பாட்டு அமைச்சகம், மகளிர் மற்றும் குழந்தை மேம்பாட்டுத் துறைகளின் பொருளாதார ஆலோசகரிடம் "11வது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆடவர் மகளிர் சரிநிகர் வரவு-செலவுத் திட்டமிடுதலுக்கான பரிந்துரைகளை"ச் சமர்ப்பித்தது. அவற்றில் முக்கியமானவை சில பின் வருமாறு :

1. "மகளிர் சம்பந்தப்பட்ட" என வரலாறு பூர்வமாகக் கருதப்பட்ட சில அமைச்சகங்கள் மற்றும் துறைகளோடு மட்டும் வரையறுத்துக் கொள்ளாது, **பெண்கள் சிறப்புக்கூறு திட்டம் அனைத்து அமைச்சகங்களுக்கும், துறைகளுக்கும் விரிவுபடுத்தல் வேண்டும்**.

2. ஆடவர் மகளிர் சரிநிகர் சமநிலை கொணர 11வது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான அணுகுமுறை வரைவு அறிக்கை (பார்க்க 'ஜென்டர் பாலன்சிங்' பிரிவு 5, 6, பக்கம் 64) "பொறுத்தமான ஒதுக்கீடுகள்" பற்றிப் பேசுகிறது. அதில் பயன்படுத்தப்படும் மொழி நீர்த்துப்போய் இருப்பதைக் கவனித்துக் கவலை கொள்கிறோம். பெண்களுக்கான சிறப்புக்கூறுத் திட்டங்களின் கீழ் உள்ள 30% ஒதுக்கீட்டைக் காட்டிலும் இது ஒரு படி பின்னடைவு தான். **பெண்களுக்கான சிறப்புக்கூறு திட்டத்தில் உள்ளபடி 30% ஒதுக்கீட்டை கொண்டுவர அரசு மீண்டும் தன் ஈடுபாட்டை உறுதி செய்யவேண்டுமென விரும்புகிறோம்.** முக்கிய சமூகப் பணிகளான நலவாழ்வு மற்றும் கல்வி மேம்பாடு ஆகியவை இரண்டு பட்டியலில் உள்ளதை கருத்தில் கொண்டு, **மகளிருக்கான சிறப்புக்கூறு திட்டத்தை அனைத்து மாநில அரசுகளும் நடைமுறைக்கு கொண்டு வர திட்டக்குழு வற்புறுத்த வேண்டும் எனவும் பரிந்துரைக்கிறோம்..**

3. 2005-06 மத்திய அரசு செலவு திட்டத்தில் முதன் முறையாக ஆடவர் மகளிர் சரிநிகர் வரவு-செலவுத் திட்டமிடுதல் பற்றி ஒரு குறிப்பு தரப்பட்டது. மகளிருக்குப் பெரிதும் பயன்படும் என எதிர்பார்க்கப்படும் பல்வேறு திட்டங்களும்சலுகைகளும், அவற்றிற்காக ஒதுக்கப்பட்ட நிதி அளவு பற்றியும் அக்குறிப்பு தெரிவித்தது. 2005-06ல் இம் முயற்சி 10 துறைகளில் எடுக்கப்பட்டது. மேலும் மொத்த மத்திய பட்ஜெட்டில்

ஆடவர் மகளிர் சரிநிகர் வரவு-செலவுத் திட்ட அளவு 2,8%மாகக் குறிக்கப்பட்டுள்ளது. 2006-07ல், அது 24 துறைகளில் 5.1% அளவுக்கு உயர்ந்தது. **என்றாலும், இந்த முயற்சியில் தீவிரமான குறைகள் பல இருப்பதை நுணுக்கமான கணிப்பு வெளிப்படுத்துகிறது. இக்குறைகள் சரி செய்யப்படவேண்டும். எனவே, கொடுக்கப்பட்டிருக்கும் புள்ளிவிபரத்திற்குப் பின்னால் அடிப்படையாக உள்ள எண்ணங்களைத் தெளிவாக்கவும் இந்த முயற்சியை இன்னும் அதிக சீரிய கவனத்துடன் செய்யவும் அரசினை வலியுறுத்துகிறோம்.**

4. இது தொடர்பாக, பல்வேறு துறைகள் மற்றும் அமைச்சகங்களில் நிறுவப்பட்ட **ஆடவர் மகளிர் சரிநிகர் வரவு-செலவுத் திட்டமிடுதல் அமைப்புகளின் திறன் வளர்க்கவும்** அரசினை வற்புறுத்துகிறோம்.

5. ஆடவர் மகளிர் சரிநிகர் வரவு-செலவுத் திட்டமிடுதல் மீதான இப்பொழுதிருக்கும் பணிகள், மகளிருக்கான ஒதுக்கீட்டை ஆராயவும் சலுகைகளைக் கண்டறியவும் என வரையறுக்கப்படுகின்றன. தெளிவாக இதையும் தாண்டி பயிற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும். கீழ்க்காணும் ஐந்துபடி அணுகுமுறையை (இது தென்னாப்பிரிக்காவில் வெற்றி கண்டது) மேற்கொள்ள அரசை வற்புறுத்துகிறோம்.
   i) மகளிரின் நிலவரத்தை அறிதல்.
   ii) கொள்கைகளின் ஆடவர் மகளிர் குறித்த தன்மையை மதிப்பிடுதல்.
   iii) வரவு செலவு திட்ட ஒதுக்கீடுகளை மதிப்பிடுதல்.
   iv) செலவு மற்றும் பணியின் பயன்களைக் கண்காணித்தல்.
   v) விளைவுகளை மதிப்பிடுதல்.

6. ஒதுக்கீடுகளைக் கண்காணிப்பதில் இருந்து, விளைவுகளைக் கண்காணிக்க வேண்டும் என குறிப்பிட்ட அணுமுறை வரைவு அறிக்கையை (பிரிவு 1.1, பக்கம் 2) நாம் வரவேற்கிறோம். என்றாலும், பாலின மற்றும் ஆடவர் மகளிர் அடிப்படையில் தனித்தனியாகப் புள்ளிவிபரம் இல்லாததால், ஆடவர் மகளிர் பார்வையில் விளைவுகளைக் கணிக்க முயற்சிப்பது இயலாமல் போகிறது. அல்லது பெரிதும் கட்டுப்படுத்தப்படுகிறது.

7. பெண்களுக்கான கூறு திட்டமும் ஆடவர் மகளிர் சரிநிகர் வரவு-செலவு திட்டமிடுதலும் இணைந்தே செயல்படவேண்டும் என நாம் உறுதியாக நம்புகிறோம். ஆடவர் மகளிர் சரிநிகர் வரவு-செலவு திட்டமிடுதல் ஓர் அணுகுமுறை, பெண்களுக்கான சிறப்புக்கூறு திட்டம் இதற்கான ஒரு நல்ல அளவுகோல் என நாம் நம்புகிறோம். மேலும், **ஒதுக்கப்பட்ட நிதி பெண்களிடம் ஒழுங்காகச் சென்றடைகிறதா என்பதை உறுதி செய்வதும்** அரசின் பொறுப்பென உறுதியாக நம்புகிறோம். இதற்காக, மத்திய மாநில அளவில் பெண்களுக்கான காலநேர அடிப்படையில் **'தங்கு தடையின்றி வழிந்தோடும் தொகுப்பு நிதி'** ஒதுக்கி வைக்கவேண்டும். மத்திய மாநில அரசுகளின் எந்த அமைச்சகத்தின் கீழும் மகளிர் சம்பந்தப்பட்ட திட்டங்களும் சலுகைகளும் பெற்ற நிதி ஒதுக்கீடுகள் குறைந்த அளவு பயன்படுத்தப்பட்டிருந்தால், எஞ்சியுள்ள மீதித்தொகை மேற்சொல்லப்பட்ட தங்கு தடையின்றி இல்லாத தொகுப்பு நிதியில் சேர்க்கப்பட வேண்டும்.

8. **"2005ஆம் ஆண்டு குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைக் காப்பாற்றும் சட்ட"த்தை நடைமுறைப்படுத்த தேவையான வளங்களையும் ஆதாரங்களையும் பதினொன்றாவது ஐந்தாண்டு திட்டம் கூடுதலாக ஒதுக்க வேண்டும்.**

9. இறுதியாக, பொதுவான பொருளாதார மற்றும் அரசியல் சூழலில் இருந்து ஆடவர் மகளிர் சரிநிகர் வரவு-செலவுத் திட்டமிடுதலைப் பிரித்துப் பார்க்க முடியாது. எனவே, லாபங்களை உச்சகட்டத்தில் கொண்ட சந்தை மற்றும் நிர்வாகப் பின்னணியில் அரசு கொள்கைகள் புதிய தாராளமய பொருளாதாரச் சித்தாந்தத்தைத் தழுவி பிரச்சனைகளுக்குத் தீர்வு காணப்போகிறது என்றால் ஆடவர் மகளிர் அடிப்படையிலான வரவு-செலவுத் திட்டம் அர்த்தமில்லாமல் போகும். மனித உரிமைகள் குறிப்பாக பெண்களுக்கான உரிமைகளை முன்னிலைப்படுத்தும் கொள்கைகள் முதன்மைப்பபடுத்தப்பட வேண்டும்.

* * *

## பின் இணைப்புகள் : ஆ
## ஆடவர், மகளிரின் பாத்திர வேறுபாடுகள்

1. **ஆடவர் மகளிர் அடிப்படையில்:**

பாலினம் என்பது ஆண்கள் மற்றும் பெண்களுக்கு சமூக மற்றும் கலாச்சாரத்தின் அடிப்படையில் உண்டாக்கப்பட்டுள்ள வேறுபாடுகள். இதை கருத்தியல் ரீதியாக பார்த்தால் வெவ்வேறு அமை.ப்புகளில் ஆண் பெண் இருவருக்கும் இடையே உள்ள சமமற்ற தன்மைகள், குறிப்பாக வேலை, குடும்பம் மற்றும் அரசியல் அமைப்புகளில் இருக்கும் ஏற்றத் தாழ்வுகளை எடுத்து இயம்பும் ஒரு கருத்தியல் கருவியாக உள்ளது.

2. **ஆடவர் மகளிர் அடிப்படையில் பகுப்பாய்வு:**

சமூக முன்னேற்றத்திற்கான செயல்பாடுகள் எவ்வாறு வித்தியாசமான தாக்கங்களை ஆண்கள் மற்றும் பெண்கள் மீது ஏற்படுத்துகின்றன என்பதை முறையாக அறிந்து கொள்ள பாலின பகுப்பாய்வு உதவுகிறது. ஆண்கள் மற்றும் பெண்களுக்கிடையே வேலை எவ்வாறு பகிர்ந்தளிக்கப்படுகிறது மற்றும் எவ்வாறு மதிப்பிடப்படுகிறது. முன்னேற்ற திட்டங்களின் ஒவ்வொரு செயல்பாட்டு நிலையிலும் இந்த பகுப்பாய்வு அவசியம். இதன்மூலம் ஒவ்வொரு செயல்திட்டமும் தீர்மானமும் பெண்கள் மீது எவ்வகையிலான தாக்கத்தை அல்லது பாதிப்பை ஏற்படுத்துகிறது என்று அறியலாம்.

3. **ஆடவர் மகளிரின் பாத்திர எல்லைகளை மீறுபவர்:**

பாரம்பரிய பாலின வரையறைகளைச் எதிர்த்து / மறுத்து சவாலிட்டு அதைத் தாண்டி செயல்படுவது, குறிப்பாக, உடை மற்றும் வேலைச் சம்பந்தமாக தேவையற்ற தலையீடு செய்வதும்;

4. **ஆடவர் மகளிரின் பாத்திரப் - பார்வை அற்றவர்:**

ஒருவர் வாழ்க்கையை நிர்ணயிப்பது அவர் சார்ந்த ஆடவர் அல்லது மகளிரின் பாத்திரம் என்பதை அறியாத நிலையில் இருந்துகொண்டு செயலாற்றுவதும்;

5. **ஆடவர் மகளிரை சரிநிகராகக் கருதும் - பார்வை அற்ற கொள்கை:**

ஆண்களுக்கும் பெண்களுக்கும் தேவைகள், வாய்ப்புகள் மற்றும் உபயோகிக்கும் உரிமை வெவ்வேறாக இருக்கிறது என்பதை கவனத்தில் எடுத்துக் கொள்ளாமல் கொள்கையை வரைவதும், இருபாலரையும் சரிநிகர் சமானமாகக் - கருதும் - பார்வை அற்ற கொள்கை எனப்படும்.

6. **ஆடவர் மகளிர் சரிநிகர் கண்ணோட்டத்தை நடைமுறை இயல்பாக்குதல்:**

ஆண் இவ்வாறாக வாழ வேண்டும், பெண் இவ்வாறாகத்தான் வாழ வேண்டும், என்று சமுதாய அமைப்பு கற்றுத்தந்ததை 'இயற்கை' என்று ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்துவதை ஆடவர் மற்றும் மகளிர் சரிநிகர் செயல்முறை என்று கொள்ளலாம்.

**7. ஆடவர் மகளிர் மத்தியில் பாரபட்சம்:**

சமூகத்தில் நிலவும் அனுமானங்கள், நடைமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகள் பெண்ணிற்கு பாரபட்சமாக இருப்பதுடன் அவரது நடமாட்டத்தையும், செயல்பாடுகளையும் பாதிப்படையச் செய்வது பாலின பாரபட்சம் எனலாம்.

**8. ஆடவர் மகளிர் அடிப்படையில் வேலை பகிர்வு:**

ஆண் பெண் இருவரும் செய்யக்கூடிய பல்வேறு வேலைகளுக்கு வெவ்வேறு வித மதிப்பு அளிக்கப்படுதலை குறிக்கிறது. பாலின வேலை பகிர்வு என்பது சமுதாயம் மற்றும் கலாச்சாரத்திற்கு ஏற்ப வேறுபடும். இவை காலம் மற்றும் சூழ்நிலைக் கேற்பவும் மாறுபடுவதற்கான வாய்ப்பு உள்ளது.

**9. ஆடவர் மகளிர் சமத்துவம்:**

ஆடவர் மகளிர் சமத்துவம் என்பது ஆணும் பெண்ணும் குடும்பம், சமூகக் குழு மற்றும் சமுதாயத்தில் சமமாக நடத்தப்படுதல். உதாரணமாக சட்டம், கொள்கை, பொருளாதார அரசியல் உரிமை எல்லாவற்றிலும் சமத்துவம் அளிப்பது.

**10. ஆடவர் மகளிர் சமநிலை:**

பலன் மற்றும் பொறுப்புக்களை ஆண், பெண் இருவரிடையே பகிர்ந்தளிப்பதில் நீதியுடன் செயல்படுதல், குறிப்பாக, இன்று நடைமுறையில் இருக்கும் சமமின்மையை போக்குவதற்கேற்ப பெண்களை மையப்படுத்திய செயல் திட்டம் மற்றும் செயல்பாடுகள் உருவாக்குதல்.

**11. ஆடவர் மகளிர் சரிநிகர் திட்டவட்ட கொள்கை:**

திட்டவட்ட ஆடவர் மகளிர் அடிப்படையில் கொள்கை என்பது குறிப்பிட்டபாலி னத்தை மையப்படுத்தி, இலக்குகளையடைய அல்லது குறிப்பிட்ட பாலினத் தேவைகளையடைய கொள்கைகள் வரைவது.

**12. ஆடவர் மகளிர் அடிப்படையில் மாற்று கொள்கை:**

ஆண்கள் மற்றும் பெண்களின் வெவ்வேறு தேவைகள் மற்றும் இடர்பாடுகளை உணர்ந்து பாலின உறவுமுறைகளை சமத்துவ பாதையில் கொண்டு செல்லும் கொள்கைகளாகும்.

**13. ஆடவர் மகளிர் கண்ணோட்டம்:**

ஆடவர் மகளிர் ஆண்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது பெண்கள் எதிர்நோக்கும் சமுதாய பாகுபாடுகள் மற்றும் பல்வேறு தாழ்வு நிலைகளை புரிந்து கொள்ளுதல்.

**14. ஆடவர் மகளிர் சரிநிகர் திட்டமிடுதல்:**

நிறுவனம் மற்றும் சமுதாய அமைப்பின் நடைமுறை நிகழ்வுகள், செயல்பாடுகளை ஆடவர் மகளிர் கண்ணோட்டத்தின் அடிப்படையில் ஆய்வு செய்யும் ஒருகருவி, நீண்டகால இலக்குகளை மையப்படுத்தி, ஆய்வின் அடிப்படையில் ஆண் பெண் இருவரிடையேயும் சமத்துவத்தை உண்டுபண்ணும் திட்டங்களை மேற்கொள்வது.

**15. பெண்களைப் பலப்படுத்துதல்:**

நடைமுறையில் உள்ள அநீதியான வேலைப்பகிர்வு முறை, உரிமையற்றநிலை மற்றும் வளங்கள் மீதான கட்டுப்பாடுகள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு மாற்று செயல்திட்டம் அமைப்பது. குறிப்பாக இத்திட்டம் பெண்கள் மற்றும் ஆண்கள் இடையேயான சமமற்ற நிலையை நன்கு உணர்ந்து அதில் மாற்றத்தை உருவாக்குவதன் மூலம் அநீதியான நிலையை மாற்றுவது.

**16. மகளிர் வலிவாக்கம்:**

பெண்களை பலப்படுத்துதல் என்பது ஒரு தொடர்நிகழ்வு. இது ஒரு பெண்ணின் திறனை வளர்த்து எடுத்து பெண்ணை அடிமைப்படுத்தும் அமைப்புகள் மற்றும் சித்தாந்தங்களில் மாற்றத்தை கொணர்வதாகும். வளங்கள் மீதான உரிமை மற்றும் பல்வேறு துறைகளிலும் தீர்மானம் எடுப்பதற்கான உரிமையுடன் தம் வாழ்க்கையை தம் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்வதற்கான உரிமையைப் பெண்கள் பெறுவது என்பதாகும். மேலும், தம்மைப் பற்றிய கண்ணோட்டம், மற்றும் தம்மைத்தாமே பார்க்கும் பார்வை இவைகளிலே மாற்றத்தைக் கொண்டுவருவதுமாகும்.

இது அநீதியான அதிகார உறவுகளை சவாலிட்டு சமநிலை மற்றும் சமத்துவத்தை சமுதாயத்தில் உண்டு பண்ணும் ஒரு தொடர்நிகழ்வாக அமையும்.

*Source : Gender Bender – A Glossary of Definitions,*
*Initiatives: Women In Development (IWID), 2002.*

* * *

## பின் இணைப்புகள் : இ
## துணை நின்ற நூல்கள்

Government documents:


1 “Gender Budget Analysis of Selected States - An Initiative (Draft)”, by Department of Women & Child Development, Government of India and National Institute of Public Co-operation & Child Development, November 2002.

1 “Gender Budget Initiative”, Annual Report 2002-2003, Department of Women and Child Development, Government of India.

1 “Budgeting for Gender Equity - a step forward”, Annual Report 2005-2006, Ministry of Women and Child Development, Government of India.

1 “Gender Responsive Budgeting for Department of Women and Child Development”, The Department of Planning Evaluation Organization, Government of Rajasthan, April 2006.

1 “Towards Faster and More Inclusive Growth: An Approach to the 11th Five Year Plan”, Planning Commission, Government of India, Draft - July & December 2006.

1 Plan-Budget Link Books (1999 - 2008), Finance Department, Budget Publication, Government of Tamilnadu.

Private documents:


1 “Government of India Budget 2000-2001 and GENDER”, by Manju Senapaty, Paper Presented at the Inter-Agency workshop on Improving the effectiveness of Integrating Gender into Government Budgets, organized by Commonwealth secretariat, London, 26-27 April 2000.

1 “Strengthening Parliamentary Governance through Gender Budgeting: The Experience of Three African Countries”, by Winnie Byanyima, International Workshop on Gender Auditing of Government Budgets, 2001.

1 “Gender Budget - A Case Study of India”, by Dr. Vibhuti Patel, 2003.

1 “State Gender Development Report 2005”, National Productivity Council, 2005.

1 “India’s Roadmap For Women”, By Deepti Priya Mehrotra, www.gorkhapatra.org, Editorial, 18th September 2006.

1 “Gender Budgeting at the Gram Panchayat Level - Kerala Experience” by Dr.Mridul Eapen, paper presented at the Gender Just Budgeting workshop organized by Women Power Connect, October 2006.

1 “UNIFEM’S initiative on Gender Responsive Budgeting”, By Sara Pilot, paper presented at the Gender Just Budgeting workshop organized by Women Power Connect on October 2006.

1 “What is Gender Budgeting? Public Policies from Women’s Perspective in the Indian Context”, by Nirmala Bannerjee, Sachetana, UNIFEM.

1 “Budget 2008-09: Reaffirming Rhetoric? Response to the Union Budget 2008-09”, Centre for Budget and Governance Accountability, March 2008.

Publications by Social Watch -Tamilnadu:

- “Social Development of Dalits and Tamilnadu Government Budget - A critique”, Tamilnadu Peoples’ Forum for Social Development, 1999.
- “Budget Analysis as Social Audit”, Tamilnadu People’s Forum for Social Development, 2002.
- “Women Component Plan (A Holistic Gender Budgeting Tool)” by Manu Alphonse, paper presented at the Gender Budget Workshop at Utkal University, Orissa, India, 2003.
- “Special Component Plan - Dalit Hopes Betrayed?”, Social Watch - Tamilnadu, 2004.
- “Towards Gender Budgeting in Tamilnadu - Perspectives for Gender Budgeting at the Provincial (State) Level”, By Ms. S. Kamatchi, Paper presented at the International Conference on Gender Mainstreaming Government Finances in South East Asian Countries, Organized by Centre for Women’s Studies, Sri Padmavati Mahila Visvavidyalayam, Tirupati, 2007.

* * * * *

தென் இந்தியாவில் தமிழக மாநிலத்தில் "சமூகக் கண்காணிப்பகம் - தமிழ்நாடு" மாநிலம் தழுவிய பொது மக்களுக்கான கொள்கையை ஆய்வு செய்து வழக்காடிப் பரிந்துரைக்கும் ஓர் அமைப்பு. தமிழக சமூக மேம்பாட்டுக்கான மக்கள் அமைப்பாக, 1995 முதல் 2003 முடிய எட்டு ஆண்டுகள் பணியாற்றிய அனுபவங்களோடு, 2004ல் ''சமூகக் கண்காணிப்பகம் - தமிழ்நாடு" என்கிற ஆய்வு நிறுவனமாக தொடர்ந்து இயங்குவது; இவ்வமைப்பு தமிழக மக்கள் அமைப்புகளின் அறிவுக்கரமாகி, கொள்கைகள் பற்றிய ஆய்வையும், வழக்காடிப் பரிந்துரைத்தலையும் செய்து வருகின்றது.

ஐ.நா. அனைத்துலக உடன்படிக்கைகள் தெளிவாகச் சுட்டிகாட்டுவதற்கொப்ப, இந்திய அரசியல் சாசன உத்தரவாதத்தோடு தமிழகத்தில் ஓரங்கட்டப்பட்ட பிரிவினரான தலித் மக்கள், பழங்குடியினர், பெண்கள், குழந்தைகள், அமைப்பு சாராத் தொழிலாளர், சிறு மீனவர் மற்றும் உடல் ஊனமுற்றோர் ஆகியோரின் வாழ்வாதார மற்றும் சமூகப் பொருளாதார அடிப்படை உரிமைகளை நோக்கித் தீவிரமாகத் தமிழக அரசின் சமுதாயக் கொள்கைகளை முடுக்கிவிடுவதை உறுதி செய்திட "சமூகக் கண்காணிப்பகம் - தமிழ்நாடு" முயற்சிகள் எடுக்கின்றது.

''சமூகக் கண்காணிப்பகம் - தமிழ்நாடு'' வரவு செலவுத் திட்ட அடிப்படையில் வழக்காடிப் பரிந்துரைத்தலை உத்தியாகப் பயன்படுத்துகிறது. அதனை சமுதாயக் கொள்கைகளைக் கணிக்கும் முதல் கருவியாகக் கொண்டு, மாற்று கொள்கைகளை உருவாக்கும் செயல்வழி முறையைத் தொடங்கி வைக்கிறது. மாநிலத்தின் நலிந்த பிரிவினரின் தேவைகளை நிறைவு செய்யும்படி பொது கொள்கைகளை முடுக்கிவிடும் முயற்சிகளில் மாநிலத்தின் கொள்கை வரைவாளர்கள், சமூகத்தை ஆய்வு செய்வோர், மற்றும் சமூகச் செயல்பாட்டாளர்கள் ஆகியோரின் பணியோடு பின்னிப்பிணைந்து, அனைத்து அம்ச பன்முக ஆய்வுடன் கூடிய வழக்காடிப் பரிந்துரைக்கும் செயல்பாடுகளைக் கைக்கொள்கிறது.

**தொடர்புக்கு**


**சமூக கண்காணிப்பகம் - தமிழ்நாடு**

202, சித்ரா அவென்யூ, (ஷாப்பிங் காம்பிளக்ஸ்),

எண்.9, சூளைமேடு நெடுஞ்சாலை, சென்னை - 600 094.

தொலைபேசி : 91-44- 2374 6044 பேக்ஸ் : 91-44- 2374 6107

மின் அஞ்சல் : admin@swtn.org

இணையத்தளம் : www.swtn.org